RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
"Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 04 ஆகஸ்ட் 2023 இதழ்:- 12

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances,
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

## 13ஐ நடைமுறைப்படுத்துமாறே ரணிலிடம் எடுத்துரைத்தோம்! தமிழ் எம்.பி.க்களிடம் தெளிவுபடுத்தியது இந்தியா!



இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடை முறைப்படுத்த வேண்டும் எனவும் அதிலுள்ள அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் எனவும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி அறிவுறுத்தினார் என்று இந்தியத்தூதுவர் கோபால் பாக்லே, தமிழ் எம்.பிக்களிடம் 01 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமை நேரில் தெரிவித்தார். (3ம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழகத்திற்குள் புத்தர் சிலை எதிர்த்த தமிழ் மாணவர்களுக்கு விசாரணை!



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில், செவ்வாய்க்கிழமை (01) போயா தினத்தை முன்னிட்டு பௌத்த கொடிகள் கட்டி புத்தர் சிலை வைத்து வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.(4ம் பக்கம் பார்க்க)

## ரெலோ கூறுவது தவறானதா?


இந்த நாட்டில் தீர்வு இல்லையென்றால் வடகிழக் கினை இந்தியாவின் ஒரு பகுதியாக இணைத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தை நாம் கோரவேண்டுமென்று ரெலோவின் தலைவர் செல்வம் (5ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

## கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலய ஜோதி விழாவில் கலந்து கொள்ள ரொறன்ரோ வந்துள்ள கலைஞர்கள்!

ஆகஸ்ட் 05, 06 சனி ஞாயிறு தினங்களில் கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலய வளாகத்திற்குள் நடைபெறவுள்ள ஜோதி விழாவில் கலந்து கொள்ள தென்னிந்தியத் தமிழ்ப் பாடகர்கள் அனந்து, ராஜகணபதி, செல்வி வர்ஷா ஆகியோர் ரொறன்ரோ விமான நிலையத்தை வந்டைந்த போது ஆலயத்தின் தலைவர் திரு தம்பிராஜா, செயலாளர் திருகாந்தி ஆகியோர் அவர்களை வரவேற்றனர். இப் பெரு நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகனத்தினரும் அனுசரனையாளர்களும் வேண்டுகின்றனர்.



BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
Dir: 416-301-9540
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
Dir: 647-221-5220
piravien@gmail.com



20 Years Real Estate Experience

HomeLife Today Realty Ltd.,
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


## Markham Rd & Denison


**Markham** $599,900
Bedrooms: 1+1 Washrooms: 1
Walking Distance To Banks, Costco

## Tecumesh Rd E & Hall Ave

**Windsor** $349,000
Bedrooms: 3+3 Washrooms: 4
Perfect For Investors

## Markham & Eglinton

**Scarborough** $529,900
Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!

## Dundas/Hurontario St

**Mississauga** $599,000
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building

## Ryerson/Victoria

**Niagara Falls** $649,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Fantastic Investment Potential

## Lawrence & Morningside

**Scarborough** $659,900
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

## Liverpool & Bayly


**Pickering** $724,500
Bedrooms: 2 Washrooms: 2
Beautifully Maintained, Upgrades

## Durham 57/Mcgill Dr

**Kawartha Lakes** $834,000
Bedrooms: 3 Washrooms: 1
Newly, renovated waterfront cottage

## Warden / St.Clair

**Toronto** $849,900
Bedrooms: 4 Washrooms: 3
Feel the Freshness of New Built home

## Finch & Mccowan

**Scarborough** $899,000
Bedrooms: 3+1 Washrooms: 4
Close To All Amenities

## Meadowvale & 401

**Scarborough** $995,000
Bedrooms: 3+2 Washrooms: 2
Brand New Entertainment Enclosure

## Morningside & Finch

**Scarborough** $999,900
Bedrooms: 4+1 Washrooms: 3
Fully Renovated Detached Home

## Meadowvale / 401

**Scarborough** $1,799,995
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

## Ellesmere & Neilson

**Scarborough** $739,900
Bedrooms: 3+1 Washrooms: 3
Good Potential for first time buyers

## Warden / Finch


**Scarborough** $2,700
Bedrooms: 3 Washrooms: 2
Renovated Kitchen, Fully Painted

## Westney & Rossland

**Ajax** $998,000
Bedrooms: 3 Washrooms: 4
finished basement with a full bath

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

## 13ஐ நடைமுறைப்படுத்துமாறே ரணிலிடம் எடுத்துரைத்தோம்!

# தமிழ் எம்.பி.க்களிடம் தெளிவுபடுத்தியது இந்தியா



இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், அதிலுள்ள அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் எனவும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தினார் என்று இந்தியத்தூதுவர் கோபால் பாக்லே, தமிழ் எம்.பிக்களிடம் 01 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமை நேரில் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்திய தூதுவருக்குமிடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள இந்தியன் இல்லத்தில் நடைபெற்றது.

இந்திய தூதுவர் கோபால் பாக்லே, பிரதித் தூதுவர், அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் உள்ளிட்டவர்கள் இதில் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தரப்பில் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோரும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தரப்பில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், சி. சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன் ஆகியோரும் பங்கேற்றர்.

இதன் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டபோது என்னென்ன விடயங்கள் இந்திய தரப்பி னால் அறிவுறுத்தப்பட்டது என்பது குறித்து இந்திய தூதர் விளக்கமளித்தார்.

இரு நாட்டுக்குமிடையில் பாலம் அமைப்பது, மின்சக்தி இணைப்பு உள்ளிட்ட பொருளாதாரம் சார்ந்த விடயங்கள் பேசப்பட்டதாகவும், 13 ஆவது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தி, மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அறிவுறுத்தியதாகவும் தூதர் குறிப்பிட்டார்.

இரண்டு கட்சிகளும் எப்படியான தீர்வை எதிர்பார்க்கிறீர்கள் என தூதுவர் அவர்களிடம் கேட்டார்.

13ஆவது திருத்தத்தை இறுதி இலக்காகக் கொள்ளவில்லையென்றும், சமஷ்டி அடிப்படையிலான தீர்வைப் பெற விரும்புவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தை தாம் அபிவிருத்தி செய்யவுள்ளதாக இந்திய தூதர் குறிப்பிட்டார். துறைமுகம், சக்தி, முதலீட்டு வலயம் ஆகியவற்றில் இந்தியா பங்களிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டபோது, என்னென்ன விடயங்கள் இந்தியத் தரப்பினால் அறிவுறுத்தப்பட்டது என்பது குறித்து இந்தியத் தூதுவர் விளக்கமளித்தார். அத்துடன் இலங்கை – இந்தியக் கூட்டறிக்கையையும் கூட்டமைப்பின் எம்.பிக்களிடம் இந்தியத் தூதுவர் கையளித்தார்.

# மூத்த வானொலிக் கலைஞர் விமல் சொக்கநாதன் லண்டனில் இடம்பெற்ற விபத்தில் காலமானார்!



இலங்கை வானொலியில் இருந்து இலண்டன் பி.பி.சி வரை அறிவிப்பாளராக பணியாற்றிய விமல் சொக்கநாதன், தனது 75ஆவது வயதில் 01 ஆகஸ்ட் 2023 செவ்வாய்க்கிழமை மாலை லண்டனில் விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

வானொலிக் கலைஞரான விமல் சொக்கநாதன், ஒரு கலைக்குடும்பத்தின் ஊடாக இளம் வயதிலேயே கலைத்துறைக்கு வந்தவர்.

சிறுவர் மலர் நாடகங்களில் ஆரம்பித்து, மேடை நாடகங்களில் நிறைய நடித்தவர். இலங்கை வானொலியில் நீண்ட காலம் அறிவிப்பாளராக பணியாற்றிய இவர், பிபிசி தமிழோசையிலும் அறிவிப்பாளராக இருந்தார்.


விமல் சொக்கநாதன் எழுதிய ‘லண்டனில் இருந்து விமல்’ என்ற நூல் அண்மையில் யாழ் பல்கலைக்கழகத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அதன் பின்னர், உலக அறிவிப்பாளர் பி.எச். அப்துல் ஹமீதின் ‘வானலைகளில் ஒரு வழிப்போக்கன்’ நூலின் அறிமுக விழா கொழும்பில் நடைபெற்ற போது, அந் நிகழ்வினை விமல் சொக்கநாதன் தலைமையேற்று நடத்தியதோடு, நூல் வெளியீட்டிலும் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் இந்திய ரூபா செல்லுபடி ஆகாது - மத்திய வங்கி

இந்திய ரூபா இலங்கையில் செல்லுபடியாகும் நாணயம் அல்ல என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. இதன்படி, நாட்டிற்குள் மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கும் இலங்கை ரூபாவை மாத்திரமே பயன்படுத்த முடியும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்திய ரூபா குறித்து தற்போது பரவி வரும் தவறான கருத்துகளை, தெளிவுபடுத்தும் வகையில் இலங்கை மத்திய வங்கி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. வெளிநாட்டு நாணயங்களாக வங்கித்தொழில் சட்டம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் 2022 ஒகஸ்டில் புதுப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி இந்திய ரூபாவுடன் 16 நாணயங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த 16 நாணயங்களை அங்கீகரித்ததன் முக்கிய நோக்கம் நாடுகளுக்கிடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை ஊக்குவிப்பதாகும். இலங்கையில் சுற்றுலாவுக்கு இந்தியா முக்கிய ஆதாரமாக இருப்பதால், வங்கி பரிவர்த்தனைகளுக்கு இந்திய ரூபாயை ஒரு நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக அங்கீகரிப்பது இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் வசதியானது. ஆனால் இந்திய ரூபாயை ஒரு நியமிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக அங்கீகரிப்பது இந்திய ரூபாயை இலங்கையில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கு செல்லுபடியாகும் நாணயமாக மாற்றாது என மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544


# யாழ்.பல்கலைக்கழகத்திற்குள் புத்தர் சிலை எதிர்த்த தமிழ் மாணவர்களுக்கு விசாரணை!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில், செவ்வாய்க்கிழமை (01) போயா தினத்தை முன்னிட்டு பௌத்த கொடிகள் கட்டி, புத்தர் சிலை வைத்து வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.




பௌத்த கொடிகள் பல்கலையினுள் கட்டிக்கொண்டிருந்த போது அதனை தடுப்பதற்கு கலைப்பீட 3ஆம் ஆண்டு தமிழ் மாணவர்கள் அங்கு சென்ற வேளை, அங்கு வந்த ஒழுக்காற்று விசாரணை அதிகாரி மாணவர்களை அங்கு செல்ல வேண்டாம் என தடுத்துள்ளார்.

அதனையும் மீறிச் சென்ற மாணவர்கள் கொடிகள் கட்டுவதை தடுத்தனர். அதனைத் தொடர்ந்து விஞ்ஞான பீடத்தின் பின்புறத்தினூடாக புத்தர் சிலை எடுத்து வரப்பட்டது. இதன் போது ஒரு கறுப்பு நிற மர்ம வாகனமும் பல்கலையினுள் நுழைந்தது. இதன் போது குறுக்கிட்ட கலைப்பீட தமிழ் மாணவர்கள், புத்தர் சிலையை பல்கலைக்கழக வளாகத்தினுள் கொண்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதன்போது அவ்விடத்திற்கு வந்த பிக்கு ஒருவர் மாணவர்களை காணொளி மற்றும் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டுள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் புத்தர் சிலையை எடுத்து வந்த பெரும்பான்மையின மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் பெற்ற அனுமதி கடிதத்தை காண்பித்து, நாங்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் அனுமதி பெற்றுத் தான் புத்தர் சிலையை கொண்டு வருகின்றோம் என்றனர். அதனையும் மீறி தடுக்க முடியாத கலைப்பீட தமிழ் மாணவர்கள் அங்கிரு ந்து அகன்றனர். ஆனால் அந்த மர்ம வாகனத்தில் வந்தது யார்? எதற்காக அந்த மர்ம வாகனம் பல்கலைக்கழகத்தினுள் வந்தது? என்ற எந்தவிதமான தகவல்களும் தெரிய வரவில்லை.

இந்நிலையில் சட்ட நிறைவேற்று அதிகாரி மற்றும் ஒழுக்காற்று விசாரணை அதிகாரி ஆகியோர், புத்தர் சிலை வைத்து வழிபடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த கலைப்பீட தமிழ் மாணவர்களை விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

தமிழர்களது நிலங்கள் பறி போகின்ற சந்தர்ப்பத்தில், பல்கலைக்கழகத்தையும் பறி கொடுப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் முயல்கிறதா என சமூக ஆர்வலர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். அத்துடன் பல்கலைக்கழக நிர்வாகமானது தமது கதிரைகளை தக்க வைப்பதற்காக அடுத்தடுத்த கட்டடங்களில், பல்கலைக்கழக வளாகத்தில் புத்தர் சிலையை வைத்து விட்டு விகாரை கட்டுவதற்கும் அனுமதி கொடுக்கும் என பல தரப்பினரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

## பறாளாய் முருகனுக்கும் ஆபத்து? அரச மரத்திற்கு உரிமை கோரும் சிங்களம்!

யாழ் சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள நூற்றாண்டு பழமை வாய்ந்த அரச மரம் சங்கமித்தையுடன் தொடர்புடைய அரச மரம் என வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதனால், முருகன் ஆலயத்தை ஆக்கிரமித்து விடுவார்களோ எனும் அச்சம் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

குறித்த அரச மரம் தொல்பொருள் சின்னமாக அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதால் எதிர்காலத்தில் அரச மரத்தை தொல்பொருள் திணைக்களத்தினர் ஆக்கிரமித்து புத்தர் சிலைகளை நிறுவி முருகன் ஆலயத்தை ஆக்கிரமித்து விடுவார்களோ எனும் அச்சம் அப்பகுதி மக்களிடம் எழுந்துள்ளது.

அதேவேளை, 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி பிக்குகள் சிலர் ஆலயத்திற்கு வந்து சென்ற நிலையில் ஆலய அரச மரத்தின் கீழ் புத்தர் சிலையை வைத்து பிரித் ஓத முனைப்பு காட்டி இருந்தனர். அதற்கு ஆலய பக்தர்கள் மற்றும் ஊரவர்கள் எதிர்ப்பு காட்டியதால் , பிக்குகள் அங்கிருந்து வெளியேறி இருந்தனர். இந்நிலையிலையே தற்போது குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தை சங்கமித்தை வந்து இறங் கிய பின் அவருடன் தொடர்புபட்ட மரமாக சித்திரித்து வர்த்தமானி வெளியிட் டமை கலாசார அழிப்பு என வட மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் குற்றம்சாட்டியுள்ளார். அத்துடன் வெள்ளரசு மரம் உள்ள இடமெல்லாம் தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் வருகிறதா எனவும் கேள்வி எழுப்பினார்.




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்று வழமையான பூஜை வழிபாடுகள் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

புதிய முகவரி

104 Rivalda Rd
Northyork - On - M9M 2M8
(Weston/Sheppard)

இரவுப் பூஜை மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும்

# கனடாவில் இனப்படுகொலை இடம் பெற்றது! தற்போது நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயல்கின்றோம்! இலங்கையும் இதனைச் செய்ய வேண்டும் - கனடா தூதுவர்

கனடாவில் இனப்படுகொலை இடம் பெற்றது என்பதை ஏற்றுக் கொண்டுள்ள இலங்கைக்கான கனடா தூதுவர் கனடா சுதேசிய மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற் படுத்த முயல்கின்றது இலங்கை க்கும் இதற்கான திறன் உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையாலும் கனடாவை போல அதிகளவு சாதிக்க முடியும். கனடா தன்னை இருமொழி நாடாக உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் முன்னிறுத்தியுள்ளது என எரிக்வோல்ஸ் தெரிவித்துள் ளார்.

கனடாவின் வாழ்க்கை பெருமள விற்கு ஆங்கில பிரெஞ்சு ஆகிய வற்றை கொண்டதாக காணப்படு கின்றது தமிழ் மொழியும் பயன்



படுத்தப்படுகின்றது கனடா தன்னை உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் தன்னை இவ்வாறே முன்னிறுத்துகின்றது இலங்கை உடனான உறவுகளிலும் இது குறித்தே கவனம் செலுத்துகின் றது எனவும் அவர் தெரிவித்து ள்ளார்.

கனடா சுதேசிய மக்களுடன் நல்லி ணக்கத்தை ஏற்படுத்த முயலகின் றது கனடாவில் இனப்படுகொலை இடம்பெற்றதை ஏற்றுக் கொண் டுள்ளோம் இது மிகவும் நீண்ட கால கடினமான நடவடிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையும் இதனை சாதகமான அம்சங்கள் சாதகதன்மைகளுடன் முன்னெடுக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடா ஒரு சிறந்த தேசமாக விளங்குவதற்கு இலங்கை தமிழர் கள் ஆற்றியுள்ள பங்களிப்பை அவர் பாராட்டியுள்ளார்.

# கனடா தூதுவரின் பகிரங்கக் கூற்றிலிருந்து இலங்கை பாடம் கற்க வேண்டும் - மனோகணேசன்

கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷ் என் பக்கத்தில் இருந்தபடி பகிரங்கமாக, கனடாவில் எங்களின் சொந்த அனுபவம் இருக்கிறது. ஆதிகுடிகள்தொடர்பில் கனடா வில் இனவழிப்பு நிகழ்ந்ததை நாம் ஏற்றுக்கொண்டு ள்ளோம். ஆதிகுடிகளுடனான இனநல்லிணக்க முயற்சி கள் நடைபெறுகின்றன. அது தொடர்பில் நாம் பணி யாற்றுகிறோம். அது சுலபமல்ல. அது நீண்ட பணி. என்று கூறினார். அதாவது தவறு, குற்றம் நிகழ்ந்ததை, அந்நாட்டு அதிகாரபூ ர்வ தூதுவர் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதிலிருந்து இலங்கை கற்க வேண்டிய பாடம் என்ன? வரலாற்றில் தவறுகள், குற்றங்கள் எங்கும் நிகழும். ஆனால் அந்த தவறுகள், குற்றங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க, முதலில் நாம் தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். மன்னிப்பு கோருவது என்பதுகூட இரண் டாம் பட்சம் தான் என்பது என் நிலைப்பாடு. ஆனால், முதல் தவறுகள், குற்றங்கள் நிகழ்ந்தன என்ற உண்மை ஏற்கப்பட வேண்டும். இதுவே இன, மத, நல்லிணக்கத்துக்கு அடிப்படை என்ற பாடத்தை கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷின் கூற்றில் இருந்து இலங்கை அரசியல், மத, சமூக தலைவர்கள் கற்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

தமுகூ தலைவர் மனோ கணேசன், கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷ் ஆகியோர் கலந்துக்கொண்டு கொழும்




பில் நடைபெற்ற கனேடிய தமிழர் பேரவை ஊடக சந்திப்பில் கனேடிய தூதுவர் நிகழ்த்திய உரை தொடர் பில் மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது,

கனேடிய தூதுவரின் நிலைப்பாடுகள் எனக்கு புதிதல்ல. அவையே எனது நிலைப்பாடுகளும் ஆகும். தவறுகள், குற்றங்கள் ஆகியவற்றை எல்லா தரப்பும் வரலாற்றில் செய்கின்றன. அரசு நிறுவனமும் செய்கிறது. அரசற்ற நிறுவனமும் செய்கிறது. இங்கு யாரும் புனிதர் அல்ல.

காலம் ஓடுகிறது. இந்த கால ஓட்டத்தில் ஓரிடத்தி லேயே தேங்கி தெப்பமாக நிற்க முடியாது. காலம் அனைத்தையும் கடத்தும். இங்கே அனைத்தும் கடந்து போகும். அப்போது புதிய பார்வைகள் தோன்றுகின்றன. (20ம் பக்கம் பார்க்க)

# அதிகாரப் பகிர்வுக்கு இது சரியான நேரமல்ல!



சர்வ கட்சி மாநாட்டில் அதிகார பகிர்வு நடைமுறை ப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல் இடம் பெற்றது. நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும். நாட்டில் சுமுகமான நிலை இருக்கும் போதே இவ்வாறான நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதனை மேற் கொள்ள சரியான நேரம் இதுவல்ல என எதிர்க்கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

28 யூலை 2023 வியாழக்கிழமை பிற்பகல் அநுராத புரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த போது சர்வகட்சி மாநாடு மற்றும் அதிகார பகிர்வு தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப் பிட்டதாவது.

சர்வ கட்சி மாநாட்டில் அதிகார பகிர்வு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. எவ்வாறு அதிகார பகிர்வை மேற்கொள்வது? அல்லது எந்த சந்தர்ப்ப த்தில் அதை செயல்படுத்துவது என்பது தொடர்பில் சிந்தித்து, நிதானமாக செயல்பட வேண்டிய தருண த்தில் இருக்கிறோம்.

நாட்டின் அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். அதுவே எனது நிலைப்பாடாகும். நாட்டில் சுமுகமான நிலை இருக்கும் போதே இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க படவேண்டும்.

நாட்டில் நெருக்கடி நிலை காணப்படும் போது இவ்வாறான பிரச்சினைகளை எடுத்துக் கொள்ளும் போது இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் தரப்பினர் பலர் உள்ளனர். அது அவர் களுக்கு சாதகமாக மாறி விடும். இதற்கு முன்னரும் இவ்வாறு இனவாத செயற்பாட்டை கொண்டே சிலர் ஆட்சிக்கு வந்தனர். இதனை செய்வதற்கு சரியான நேரம் இதுவல்ல என நான் நினைக்கிறேன். இருப்பினும் அதற்கான நியாயம் வழங்கப்பட வேண்டும் என்றார்.

# ரெலோ கூறுவது தவறானதா?

இந்த நாட்டில் தீர்வு இல்லையென்றால், வடகிழக் கினை இந்தியாவின் ஒரு பகுதியாக இணைத்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தை நாம் கோரவேண்டு மென்று, ரெலோவின் தலைவர் செல்வம் அடை க்கலநாதன் தெரிவித்திருக்கின்றார்.

ரெலோ கூறுவதை ஏனைய தமிழ் தேசியக் கட்சி களும் கூறுமா? அண்மையில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில், நிலத் தொடர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கிலான பல்வேறு திட்டங்கள் ஆராயப்பட்டிருந்தன.

இரு நாடுகளுக்குமான எரிசக்தி இணைப்பு தொடர்பில் ஏற்கனவே உடன்பாடு காணப்பட்டிரு க்கின்றது. இதற்கான பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேபோன்று, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை துறைமுகத்திற்கும் தென்னிந்தி யாவிற்கும் இடையிலான எண்ணெய்க் குழாய்கள் பொருத்துவது தொடர்பான சாத்திய ஆய்வுகளை மேற்கொள்வதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டி ருக்கின்றது.

பொருளாதார ரீதியில், வடக்கு கிழக்குடனான இந்தியாவின் தொடர்புகள் வலுவடைந்துவரும் சூழலிலேயே, ரெலோவின் தலைவர் இவ்வாறான தொரு கருத்தை தெரிவித்திருக்கின்றார். இது அடிப்படையில் துணிகரமான ஒரு கருத்து.

ஏனெனில் இலங்கைக்குள் தமிழ் மக்கள் தொட ர்ந்தும் இரண்டாம்பட்சமாகத் தான் நடத்தப்படு வார்கள் என்றால், தமிழ் மக்கள் வேறு ஏற்பாடு களைத் தானே கோர முடியும்.

ஒன்றில் தனிநாட்டை தமிழ் மக்கள் கோர வேண் டும் இல்லாவிட்டால் இந்தியாவுடனான மாநில இணைப்பை கோரவேண்டும். தனிநாட்டை கோரி னாலும் அதனையும் இந்தியாதான் பெற்றுக் கொடுக்க வேண்டும். அது சாத்தியமானதல்ல.

ஒரு காலத்தில் சிங்கள தலைவர்கள், இலங்கை யையே இந்தியாவின் மாநிலமாக இணைக்குமாறு கோரியிருந்தனர்.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் அவ் வாறான பார்வை சிங்கள அரசியல் தலைவர்கள் மத்தியிலிருந்தது.

இலங்கையை இந்தியாவின் ஒரு மாநிலமாக இணைக்குமாறு, இந்தியத் தலைவர்களுக்கு கடிதங்கள் கூட அனுப்பப்பட்டிருந்தன.

எனினும் இலங்கை சுதந்திரமடைந்ததை தொட ர்ந்து சிங்கள தேசியவாதம் எழுச்சியுற்றது.

இலங்கைத் தீவை ஒரு சிங்கள பௌத்த தீவாக பேணிப் பாதுகாக்க வேண்டுமென்னும் நிலைப் பாட்டில், சிங்கள ஆளும்வர்க்கம் ஒன்றுபட்டது.

இதன் பின்னர் இந்தியாவினால் எப்போதும் தங்களு க்கு ஆபத்து நேரிடலாமென்னும் கருத்துருவா க்கத்தை பரவல்படுத்தினர்.

தமிழ் மக்களை இந்தியாவின் விரிவாக்கலுக்கான மக்கள் கூட்டமாக கருதும் சிந்தனைமுறைமை சிங்கள தேசியவாத அரசியலில் அங்கமாகியது. இன்று வரையில் அது தொடர்கின்றது.

இந்திய — இலங்கை ஒப்பந்தமே, முதல் முதலாக, தமிழ் மக்கள் வாழும் வடக்கு — கிழக்கை, தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடமாக அங்கீகரித்தது.

இந்த ஒப்பந்தத்தின் விளைவாகவே, மாகாண சபை முறைமை அறிமுகமானது.

அதற்கான அதிகாரங்களை உறுதிப்படுத்தும் விடயமே தற்போது விவாதப் பொருளாகியிருக் கின்றது.

ஒப்பந்தத்தின்படி, மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்.

ஆனால், இன்றுவரையில் அது நடைமுறைப்படு த்தப் படவில்லை. இதில் தமிழர் பக்கத்திலும் தவறுகள் உண்டு.

ஏனெனில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் அனைத்து தரப்புக்களும் ஓரணியாக, அதனை முழுமையாக பயன்படுத்த முற்படவில்லை.

ஆனால் தற்போதும், காணி பொலிஸ் அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்படுவதை, தென்னிலங்கையின் பெரும்பான்மை கட்சிகள் உடன்படவில்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் கூற்றில் நியாயமுண்டு.

ஏனெனில் தமிழ் மக்கள் வேறு என்னதான் செய்வ தென்னும் கேள்விக்கான பதிலாகவே, அடைக்கல நாதனின். (20ம் பக்கம் பார்க்க)

# சமஷ்டிக் கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு! தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விசேட அறிக்கை!

இலங்கையின் அரசியலமைப்பில் ஒரு பகுதியாகக் காணப்படும் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கூட, ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும் தரப்பினால் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலைமையே காணப்படுவதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது அரசியலமைபை முழுமையாக மீறுவதாக அமையும் எனக் கூறியுள்ள எம்.ஏ.சுமந்திரன், அரசியலமைப்பில் தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம் என வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம், நீண்டகாலமாக தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தலை நடத்துதல், அதிபர் ரணில் விக்ரமசிங்கவினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடுகள் தொடர்பாக தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் கையொப்பத்துடன் விசேட அறிக்கையொன்று வெளியிடப் பட்டுள்ளது.

தமிழ் மக்கள், 1956 ஆம் ஆண்டு முதல், வடக்கு – கிழக்கில் சமஷ்டி ஏற்பாட்டின் மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நோக்கிச் செயற்படுவதற்கான ஆணையை, தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தொடர்ச்சியாக வழங்கியுள்ளனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

TAMIL NATIONAL ALLIANCE
தமிழ் தேசியக் கூட்டமைப்பு

1987 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கையில் வடக்கு கிழக்கானது தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடமாக ஏற்றுக்கொள்ளப் பட்டு, மாகாணங்களுக்கு காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் உள்ளடங்கலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டிருந்தது என எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

மேலும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும், இலங்கையின் தமிழ் சமூகத்திற்கு சுய மரியாதை மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்யவும் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்றும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனான சந்திப்பில் பிரதமர் நரேந்திர மோடி தனது நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தார்.

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் ஆகியன இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கும், அதனை எளிதாக்குவதற்கும் இன்றியமையாத கூறுகளாகும் என பிரதமர் தெளிவாகக் கூறியிருந்தார் எனவும் எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவே தமது நிலையான நிலைப்பாடாக இருந்து வருவதுடன், இது இரு தலைவர்களுக்கிடையிலான சந்திப்பின் போதும் முன்வைக்கப்பட்டது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1956 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தப்படும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இணங்க, சமஷ்டி கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## பிரேசிலைச் சேர்ந்த உலகின் மிக வயதான மனிதர் ஜோஸ் கோம்ஸ் 127வது வயதில் மரணம்!

பிரேசிலைச் சேர்ந்த உலகின் மிக வயதான மனிதர் ஜோஸ் பாலினோ கோம்ஸ் வயது மூப்பு காரணமாக தனது 127வது வயதில் காலமானார். அடுத்த வாரம் 128வது வயதில் அடி வைக்க இருந்த நிலையில், கோம்ஸ் உயிரிழந்துள்ளார்.

கோம்ஸின் உடல் உறுப்புகள் செயலிழந்ததால் இறந்து விட்டதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். மினாஸ் ஜெரைஸில் அமைந்துள்ள பெட்ரா பொனிடாவில் உள்ள அவரது வீட்டில் கோம்ஸ் இறந்துள்ளார். இதையடுத்து, அவரது உடல் கடந்த சனிக்கிழமை (20ம் பக்கம் பார்க்க)




தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**

**(For High School Students)**



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# நிலமும் மக்களும் இல்லாத சமஷ்டி யாருக்கு? 13வது திருத்தம் இருப்பைத் தக்க வைக்கும்!

பதின்மூன்றாவது திருத்தத்தை வேண்டாம் என எதிர்ப்பவர்கள், எமது நிலமும் பறிபோய் இனப் பரம்பலும் மாற்றப்பட்டதன் பின் சமஷ்டியைப் பெற்று என்ன பயன் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பினார்.

திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த சனிக்கிழமை(29) இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ் வாறு கேள்வி எழுப்பினார். அவர் அங்கு மேலும் தெரி விக்கையில்,

சிலர் பதின்மூன்றாவது திருத்தம் வேண்டாம், பதின் மூன்றை கேட்பவர்கள் துரோகிகள் என தொடர்ச்சியாக கூறிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் கூறும் போது நானும் பதின்மூன்றை வேண்டாம் எனக் கூறி வந்த நிலையில் தற்போது பதின்மூன்றை வேண்டும் என கூறுகின்றேன் எனக் கூறுகிறார்கள்.

நாங்கள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான ஆரம்ப புள்ளியாக பதின்மூன்றை ஏற்றுக்கொண்டோமே தவிர தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வாக இன்றும் பதின்மூன்றை ஏற்கவில்லை.

தற்போதைய சூழ்நிலையில் எமக்கு வழங்கப்பட்டுள்ள 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாது விட் டால் தமிழ் மக்களின் இருப்புக் கூட கேள்விக்குறி யாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள், தொல்லியல் மற்றும் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்டு வருவதுடன் நிலத்தினிவுகளை பெரும்பான்மையினர் வாழும் மாகாணங்களுடன் இணைக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வரு கிறது.

அது மட்டுமல்லாது மகாவலி என்ற போர்வையில் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் சிங்கள குடியேற்றங்கள் நிறுவப்பட்டு வரும் நிலையில் அதனை தடுப்பதற்கு 13 வது திருத்தத்தில் வழங்கப் பட்ட காணி அதிகாரத்தை பயன்படுத்த முடியும்.

மேலும் தமிழ் மக்கள் மற்றும் தமிழ் புத்திஜீவிகள் துறை சார்ந்த நிபுணர்கள் எனப் பலரும் நாட்டை விட்டுத் தொடர்ச்சியாக வெளிநாடுகள் சென்று கொண்டிருக்கும் நிலையில் தமிழ் இன விகிதாசாரம் வெகுவாகக் குறைந்து வருகிறது.

இவ்வாறான ஒரு நிலையில் பதின்மூன்று வேண்டாம் சமஸ்டி தான் வேண்டும் என கேட்பவர்கள் இவ்வளவு விடயங்களும் நடந்து முடிந்த பின்னர் சமஸ்டியை பெற்று என்ன செய்யப் போகிறார்கள். ஒரு இனத்தின் அடையாளத்தை தக்க வைத்துக் கொள்வதற்கு நிலப் பரப்பு அவசியம் நிலங்களை இழந்து எமது அடையா ளங்களை காக்க முடியாது.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் கட்சிகளின் தலைவர்களை அண்மையில் சந்தித்து கலந்துரை யாடிய நிலையில் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறினோம். இறுதியாக இடம் பெற்ற சர்வ கட்சி மாநாட்டில் தமிழ் கட்சிகளை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்த ஜனாதிபதி பெரும்பான்மை இன கட்சிகளை சேர்ந்த கட்சியின் தலைவர்களையும் மாநாட்டுக்காக அழைத்தி ருந்தார்.

பதின்மூன்று தொடர்பில் கலாநிதிகாசிலிங்கம் விக்னேஸ வரன் தயாரித்த வரைவு ஒன்றை ஏற்கனவே ஜனாதி பதியிடம் நாம் கையளித்து உள்ள நிலையில் பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த கட்சியைகளின் தலைவர் களை ஏன் ஜனாதிபதி எம்முடன் அழைத்தார் எனச் சிந்தித்தேன்.

ஒருவேளை பதின்மூன்றைக் குழப்புவதற்காக அழைத் தாரோ என சிந்தித்த போது நடைபெற்ற மாநாட்டில் சிலரை தவிர பெரும்பாலானோர் பதின் மூன்று தொடர் பில் சாதகமான நிலைப்பாட்டை கொண்டிருந்தனர்.

பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்து மாறு முன்னர் கூறிய சுமந்திரன் இறுதியாக இடம் பெற்ற சர்வ கட்சி மாநாட்டில் 13-ஐ நடைமுறைப்படு த்துவதை விடுத்து மாகாண சபை தேர்தலை உடனடியாக வைக்குமாறு கூறினார் அதற்கு ஜி.எல். பீரிஸ் ஆதரவாக பேசினார்.

சுமந்திரனுடைய கருத்தினால் கோபமடைந்த ஜனாதி பதி ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு கருத்தை கூற வேண்டாம் முதலில் பதிமூன்றை நடைமுறைப்படுத்து மாறு கூறினீர்கள் தற்போது தேர்தலை கேட்கிறீர்கள் முதலில் உங்களின் நிலைப்பாட்டை சரியாக அறிந்து வாருங்கள் என கூறினார். அன்று இரவு எனக்கு தொலைபேசியில் அழைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுமந்திரன் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்கிறார் உங்களின் நிலைப்பாடு என்ன நாங்கள் (20ம் பக்கம் பார்க்க)

# 13ஐ நடைமுறைப்படுத்தினால் செய்ய வேண்டியதை நாம் செய்வோம் என எச்சரிக்கும் எல்லே குண தேரர்




13 ஆவது திருத்த அமுலாக்க திட்டத்தை அரசாங்கம் கொண்டு வரட்டும், அதன் பின் செய்ய வேண்டியதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என தேசிய வளங் களை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தினால் இனப்பிரச்சி னைக்கு தீர்வு காணலாம் என அரசாங்கம் குறிப்பிடு கிறது. நாட்டில் முதலில் இனப்பிரச்சினை என்ப தொன்று உள்ளதா? என்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். இல்லாத பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுவது தற்போதைய பிரச்சினைகளுக்கு பிரதான காரணியாக உள்ளது.

நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏதாவதொரு பிரச் சினை உள்ளது. வங்குரோத்து நிலைக்கு மத்தியில் ஒரு தரப்பினரது பிரச்சினைகளுக்கு மாத்திரம் தீர்வு காண அரசாங்கம் முயற்சித்தால் அதை கடுமையாக விமர்சிப்போம். அரசியலமைப்பின் 13 ஆவது திருத்த அமுலாக்க திட்டத்தை அரசாங்கம் முதலில் கொண்டு வரட்டும் அதன் பின் செய்ய வேண்டியதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.

தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த அரசியலமை ப்பின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண டிய தேவை ஏதும் கிடையாது. அரசியல்வாதிகள் தங்களின் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக முரண் பாடுகளை தோற்றுவிக்காமல் இருந்தால் பிரச்சினைகள் தோற்றம் பெறாது.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு தேசிய வளங்களை தனியார் மயப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. இருக்கும் வளங்களை விற்பது, கடன் பெறுவது ஆகியன மாத்திரம் அரசாங கம் பொருளாதார கொள்கையாக காணப்படுகிறது. தேசிய வளங்களை தனியார் மயப்படுத்தும் அரசாங்க த்தின் முயற்சியை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத் துவோம் என்றார்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
**eelanadu.ca** மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# எது வரையில் வெளியாரின் தலையீடு?

இலங்கைக்கான நோர்வே தூதரகம் முற்றிலுமாக மூடப்படுகின்றது. இலங்கை மற்றும் மாலைதீவு தொடர்பான விடயங்களை இந்தியாவிலுள்ள நோர்வே தூதரகமே கையாளவுள்ளது.

நோர்வே என்பது ஒரு காலத்தில் அனைத்து தமிழர்களாலும் விருப்பத்துடன் உச்சரிக்கப்பட்ட ஒரு பெயர். எரிக் சொல்ஹெய்ம் வருவதும், போவ துமே, இலங்கையின் பிரதான செய்தியாக இருந் தது.

2005இல் இலங்கையின் இரண்டு தரப்புக்களும் யுத்தத்தை தெரிவு செய்தபோது நோர்வேயின் ஈடு பாடு முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் இலங்கை யில் நோர்வேயின் அனுபவங்கள் தொடர்பில் அவ்வப்போது பேசப்பட்டது.

பின்னர் நீண்ட காலத்திற்கு பின்னர், மீளவும் நோர்வே நினைவுக்கு வந்தது, எரிக் சொல் ஹெய்ம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக நியமிக்கப்பட்டபோது தான்.

2009இல் யுத்தம் மோசமான அழிவுகளுடன் முற் றுப் பெற்ற போது, ஒரு பகுதி தமிழ் புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் நோர்வேயின் மீதான அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

யுத்தத்தின்போது, மக்களை பாதுகாக்கும் கடப் பாட்டை நோர்வே கருத்தில் கொள்ளவில்லை யென்று குற்றம் சாட்டினர்.

எங்களுடைய பணி இரண்டு தரப்புகளும் அமைதியை விரும்பும் வரைக்கும் தான் அவர் கள் யுத்தத்தின் மூலம் தீர்வை காண விரும்பி னால் அதன் பின்னர் எங்களால் என்ன செய்ய முடியும்? என்று கூறி நோர்வே கைவிரித்தது.

இறுதி யுத்தத்தின்போது ஐக்கிய நாடுகள் சபை யின் பேச்சாளராக இருந்த கோடன் வைஸ், அண் மையில், நாடு கடந்த அரசாங்கம், முள்ளிவாய்க் கால் நிகழ்வில், நினைவுப் பேருரை நிகழ்த்தியிரு ந்தார். அவரது பேச்சின் உள்ளடக்கம்? ரணில் விக்கிரமசிங்க அனுபவமுள்ள அரசியல்வாதி.

அவருடன் பேசி பிரச்னைகளை தீர்க்க முயற்சிக்க வேண்டுமென்று, புலம்பெயர் சமூகத்திற்கு அறி வுரை கூறியிருந்தார். அவர் தனது, இறுதி யுத்த அனுபவங்களை முன்வைத்து, 'கூண்டு' என்னும் பெயரில் ஒரு நூலையும் வெளியிட்டிருந்தார்.

இது போன்ற விடயங்கள் என்னைப் போன்ற ஒருவரை பாதிப்பதில்லை இது முற்றிலும் அந்த மக்களுக்குரியது. நான், எனது வீட்டு மொட்டை மாடியிலிருந்து, அடுத்த நூலுக்கான குறிப்புக் களை எடுத்துக் கொண்டிருக்கின்றேன் என்றார்.

ஒரு வெளியுலக இராஜதந்திரியின் எல்லை இவ் வளவு தான். இதில் கவலைப்படுவதற்கும், ஆதங்க ப்படுவதற்கும், விமர்சிப்பதற்கும் எதுவுமில்லை.

இராஜதந்திரிகள் வருவார்கள், செல்வார்கள். அத்துடன் அவர்களது பணி முடிந்து விடும்.

பிரச்சனைகளிலிருந்து விடுபடுவது, பாதிக்கப் பட்ட சமூகமொன்றின் ஆற்றலில் தங்கியிருக்கின் றது.

சூழ்நிலையை புத்திசாதுரியமாக கைக்கொள்வதி லிருந்து, ஒவ்வொரு சமூகங்களும் அதற்கான நன்மையை பெற்றுக் கொள்கின்றன. சந்தர்ப்பங் களை புத்திசாதுரியமாக கைக் கொள்பவர்கள் முன்னோக்கி பயணிக்கின்றனர் மாறாக, தவற விடுபவர்களே, மற்றவர்கள் மீது குற்றம்சாட்டிக் கொண்டு, காலத்தை கடத்திக் கொண்டிருக்கின் றனர்.

இன்று தமிழ் மக்கள் வந்து சேர்ந்திருக்கும் இட மும் இது தான். தங்களுக்கான தேவையை சொல்லத் தெரிந்திருக்கும் அரசியல் தலைமைகள் என்போருக்கு, எவ்வாறு அதனை நோக்கிச் செல்வதென்று தெரியாமல் இருக்கின்றது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தில், தமிழ் மக்கள் சார் பாக இந்தியாவே கையெழுத்திட்டது. இந்த பின் புலத்தில் தான் இந்தியா மட்டும் சில விடயங்களை கூறிவருகின்றது. தவிர, இந்தியா ஓர் உடனடி அயல்நாடாக இருப்பதும் இதற்கான காரண மாகும். எனவே சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ளும் தந்திரம் பழகுவதில் தான், தமிழர்கள் முன்னோக்கி பயணிக்க முடியும். (20ம்பக்கம்)

# தமிழரின் மாகாணம் என்ற நிலையை 5 ஆண்டுகளில் வடக்கு இழந்து விடும் அபாயம் குறித்து பேராசிரியர் பத்மநாதன் கவலை!

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெரும்பாலான பீடங்கள் பெரும் பான்மை இனத்தவர்களின் கைகளுக்கு சென்றுள்ள நிலையில் ஐந்து வருடங் கள் சென்றால் வடக்கு மாகாணம் தமிழர்களின் மாகாணம் எனக் கூறும் நிலை மாறிவிடும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரி யரும் வேந்தருமான பத்மநாதன் தெரி வித்தார்.

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் அமைந்துள்ள பிரபல தனியார் விருந்தி னர் விடுதியில் 29 யூலை 2023 சனிக் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக் கையில்

யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கலைப் பீடத்தை தவிர ஏனைய பீடங்கள் பெரும்பான்மை ஆனவர்களுடையதாக மாறியது போல் வடக்கு மாகாணமும் தமிழர்களின் தனித்துவமான அடை யாளத்தில் இருந்து மாறக்கூடிய வகை யில் ஏற்பாடுகள் இடம் பெற்று வரு கிறது.

தமிழ் மக்களுடைய மொழி கலாச்சாரம் பண்பாடு ஆகிய பாதுகாக்கப்பட வேண்டுமானால் வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அதனைப் பாதுகாப்பதற்கு 13 வது திருத்தத்தில் உள்ள பறிக்கப்பட்ட பல அதிகாரங் களை மீளப்பெற்று நடைமுறைப்படு த்துவதன் மூலம் எமது இருப்பை ஓரளவு நிலை நாட்ட முடியும்.




நான் அரசியல்வாதியோ அல்லது அரசியல் கட்சியின் பிரதிநிதியாகவோ எனது செயற்பாடுகளை என்றைக்கும் மேற்கொண்டதில்லை. ஆனாலும் எனக்கு பத்துக்கும் மேற்பட்ட விருது களை தந்துள்ளார்கள்.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நீண்ட வரலாறு உண்டு. தமிழ்த் தலை வர்கள் உரிய நேரத்தில் கேட்க வேண் டியவற்றை கேட்காமையின் தவறே இலங்கையில் இனப் பிரச்சினை உரு வெடுத்தது.

இராமநாதன் தொடக்கம், 50:50 திட்டத் தினை முன்வைத்த காலம் வரையான தலைவர்களின் மகத்தான தவறாகும். அப்போதைய தமிழ்த் தலைவர்கள் கொழும்பை மையமாக கொண்டு வடக்கு கிழக்கு தமிழர்களின் பிரச்சி னையை நோக்கினார்கள்.

கிழக்கு மாகாணம் மூன்று சமூகங்களின் பிரதேசமாக உள்ளது அதிலும் குறிப் பாக முஸ்லீம் சமூகம் தமிழ் சமூக த்திலும் பார்க்க கூடுதலாக காணப்படு கின்றனர். திருகோணமலையில் பெருந் தொகையான தமிழர்கள் முஸ்லீம்களாக மாறிவிட்டார்கள். ஏனெனில் தமிழர்களை கவனிப்பார்கள் இல்லை. அவர்களை கவனிப்பதற்கு அதிகாரமும் இல்லை.

எமக்கான அதிகாரங்களை பெற்றுக் கொண்டால் நிலங்களையும், கடல் வளங்களையும் பயன்படுத்தி பொரு ளாரத்தில் பலமடையமுடிவதோடு தொழில் வாய்ப்புக்களையும் உருவாக் கிக் கொள்ள முடியும். எனவே உரிய முறையில் மாகாணசபை அதிகாரங் களை நடைமுறைப்படுத்த எல்லா கட்சி களும் ஆதரவளிக்க வேண்டும். கல்விய லாளர்கள், பொதுமக்களும் ஆதரவு வழங்க வேண்டும்.

மாகாணசபை முறைமை தமிழ் மக்க ளுக்கான இறுதித் தீர்வல்ல. காலா காலம் இலங்கை ஜனாதிபதிகள் ஒவ்வொரு தீர்வு முறைமைகளை முன்வைத்தனர்.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இறுதித் தீர்வை முன்நிபந்தனையாக வைத்தால் சிங்கள ஆட்சியாளர்கள் ஒற்றையாட்சியையே வலியுறுத்து வார்கள்.

5 வருடங்கள் சென்றால் வடக்கு மாகா ணம் தமிழர்களின் மாகாணம் என்று கூறும் நிலை மாறிவிடும். அதற்கு பின் எந்த அதிகாரத்தை கேட்க முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எப்படி கலைப்பீடத்தை தவிர ஏனைய பீடங்கள் பெரும்பான்மையானவர்களுடையதாக மாறியதோ அது போல் வடக்கு மாகாணமும் மாற்றமடையும்.

தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் தமது சமூதாயத்தின் அபிலாசைகளையும், அவர்களது இருப்பைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். இதுவே அரசியல் தலைவர்களின் கடமை எனத் தெரிவித்தார்.

**கொழும்பில் வீடு விற்பனை**

**கொழும்பு கொட்டாஞ்சேனையில் திருத்தி அமைக்கப்பட்ட தொடர்மாடியில் வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.**

**மேலதிக விபரங்களுக்கு:- 647 779 1712**

# 18 வருட மணவாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வரும் கனடியப் பிரதமரும் மனைவியும் பிரிவதாக அறிவிப்பு!



கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது மனைவி சோ்பி ஆகியோர் 02 ஆகஸ்ட் 2023 புதன் கிழமை எதிர்பாராத அறிவிப்பில் பிரிந்து செல்வுள்ளதாக தெரிவித்தனர். இத் தம்பதியரின் 18 ஆண்டுகால உயர்மட்ட திருமணத்தின் முடிவைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளது.

ட்ரூடோ, 51, மற்றும் சோ்பி கிரிகோயர்-ட்ரூடோ, 48, மே 2005 இன் இறுதியில் திருமணம் செய்து கொண் டனர். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

பல அர்த்தமுள்ள மற்றும் கடினமான உரையாடல்களுக்குப் பிறகு நாங்கள் பிரிவதற்கான முடிவை எடுத்துள்ளோம் என்ற உண்மையை நானும் சோ்பியும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்' என்று ட்ரூடோ Instagram இல் கூறி னார். சோ்பி தனது சொந்த இன்ஸ்டா கிராம் கணக்கில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான செய்தியை வெளியிட்டார்.

இருவரும் சட்டப்பூர்வ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக ட்ரூடோவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.அவர்கள் பிரிந்து செல்வது தொடர்பான அனை த்து சட்ட மற்றும் நெறிமுறை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்த அவர்கள் பணி யாற்றினர். மேலும் அதை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வார்கள் என்று அது கூறியது.

2015ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ட்ரூடோ பிரதமரான பிறகு, அவரும் சோ்பியும் அடிக்கடி சமூக நிகழ்ச்சிகளி லும் வெளிநாட்டு பயணங்களிலும் ஒன்றாகக் காணப்பட்டனர். ஆனால் சமீபத்திய ஆண்டுகளில், சோ்பி தனது கணவருடன் இதுபோன்ற பயணங் களை குறைத்துள்ளார். அவர்கள் இரு வரும் மே மாதம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டு விழாவிற்காக லண்டனு க்குச் சென்றனர் மற்றும் மார்ச் மாத இறுதியில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் விஜயம் செய்தபோது ஒன்றாக இருந்தனர்.

அவர்கள் ஒரு நெருங்கிய குடும்பமாக இருக்கிறார்கள், சோ்பியும் பிரதமரும் தங்கள் குழந்தைகளை பாதுகாப்பான, அன்பான மற்றும் கூட்டுச் சூழலில் வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறார்கள்' என்று ட்ரூடோவின் அலுவலகத்தின் அறிக்கை கூறுகிறது. 'அடுத்த வாரம் முதல் விடுமுறையில் குடும்பம் ஒன்றாக இருக்கும் எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேர்தல் முறைகேடுகள்:- டிரம்ப் மீது 4 பிரிவுகளில் வழக்குப் பதிவு

தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டோனா ல்ட் டிரம்ப் மீது நான்கு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயன்றதாக எழுந்த புகார் குறித்து ஆய்வு செய்த நீதிபதிகள் குழு, டிரம்ப் மீது வழக்குத் தொடுக்க அனுமதி வழ ங்கியுள்ளது.

அதன்பேரில் நாட்டை ஏமாற்ற முயன் றது, அதிகாரிகளின் நடவடிக்கைக்கு இடையூறு செய்ய முயன்றது உள்ளி ட்ட பிரிவுகளில் வழக்குப் பதியப்பட்டு ள்ளது.

ஜோ பைடனின் வெற்றியை உறுதி செய்வதை நிறுத்துவதற்கு டிரம்ப் சதி



செய்ததாகச் சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பான விசாரணைக்கு வரு மாறு டிரம்ப்க்கு வாஷிங்டன் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

**ஈழநாடு தொடர்புகளுக்கு:-**

**416 841 9600**

உ
சிவமயம்





# துர்க்கேஸ்வரம்
# ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவில்

30 Carnforth Road, Toronto, Ontario, CANADA M4A 2K7 www.durka.com Tel: 416-759 9648

## அஷ்டோத்திர (1008) சகஸ்ர சங்காபிஷேக
# மண்டலாபிஷேக பூர்த்தி விழா

## 5-8-2023 (ஆடி மாதம் 20ம் திகதி) சனிக்கிழமை

பக்தப்பெருமக்களே!

தெய்வானுக்கிரகத்தினால் துர்க்கேஸ்வரம் திருக்கோவில் புனருத்ததாரணம் செய்யப் பெற்று, வெகுவிமரிசையாகவும் பக்திபூர்வமாகவும் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று 48 தினங்கள் மண்டலாபிஷேகம் நிகழ்ந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், மண்டலாபிஷேக பூர்த்தி விழாவின் விபரங்களைத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

நிகழும் சுவஸ்திஸ்ரீ மங்களகரமான சுபகிருது வருடம் ஆடி மாதம் 20ம் திகதி

## 5-8-2023 சனிக்கிழமை காலை 10 மணிக்கு

ஸ்ரீமஹாகணபதிப் பெருமான், ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள், வள்ளி தெய்வானை சமேத கல்யாணசுப்ரமண்யப் பெருமான் மற்றும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் மண்டலாபிஷேகம் பூர்த்தியுறும் அருள்நிகழ்வு கீழே தரப்பட்ட நேரப்பிரகாரம் இடம்பெற உள்ளது. இத்தருணத்தில் பக்தர்கள் அனைவரும் தவறாது ஆசாரசீலர்களாக ஆலயம் வருகைதந்து அம்பாளின் திருவருட்கடாட்சம் பெற்றுய்வீர்களாகுக.

### 4-8-2023 வெள்ளி

காலை 10:00 மணி முதல்

விக்ஸேஸ்வர பூஜை,
புண்யாகவாசனம்
அனுக்ஜை
அன்னதானம்
முதலியன

........................................

மாலை 6:00 மணி முதல்

கடஸ்தாபனம்
யாகசாலாபிரவேஷம்,
1ம் கால யாகபூஜை
அக்னிகார்யம், ஹோமம்
பூர்ணாகுதி, தீபாராதனை
சதுர்வேத ஸ்தோத்திர திருமுறை
பாராயணம்
அன்னதானம் முதலியன

# 5-8-2023 சனி

### பகல் வழிபாடு

காலை 9:00 மணி முதல்

- 2ம் கால யாக பூஜை
- ஹோமம் - திரவ்யஹோமம்
- பூர்ணாகுதி
- தீபாராதனை
- 1008 சங்காபிஷேகம்

**மண்டலபூர்த்தி**

- விஷேட பூஜை
- அஷ்டோத்ர சதநாமாவளி
- சதுர்வேத ஸ்தோத்திர திருமுறை பாராயணம்
- அன்னதானம் முதலியன

### இரவு வழிபாடு

மாலை 5:30 மணி - சாயரட்சை பூஜை
மாலை 6:00 மணி - மங்கள இசை
மாலை 6:45 மணி - இசை நிகழ்ச்சி
மாலை 7:30 மணி - விஷேட பூஜை
இரவு 8:00 மணி - வசந்த மண்டப பூஜை
இரவு 8:30 மணி - விநாயகர், ஸ்ரீதுர்க்காதேவி, மஹாலட்சுமி, சரஸ்வதிதேவி, முருகப்பெருமான் ஆகிய பஞ்சமூர்த்திகள் முறையே மூஷிகம், சிங்கம், யானை, அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்து அருள்புரிவர்
இரவு 9:00 மணி - அன்னதானம்

**மண்டலாபிஷேக தலைமை சிவாச்சாரியார்**

மஹாகுரு சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்

**சிவாச்சாரியார்கள்**

சிவஸ்ரீ. வி. ராமநாதன் குருக்கள்
சிவஸ்ரீ. வி. மணிக் குருக்கள்
சிவஸ்ரீ. கா. புவனேந்திரக் குருக்கள்
சிவஸ்ரீ. க. கோபிசர்மா குருக்கள்
சிவஸ்ரீ. சு. கேதீஸ்வரநாதன் குருக்கள்
சிவஸ்ரீ. நா. ஹரீந்திரன் குருக்கள்
சிவஸ்ரீ. கெ. வெங்கடரமணசர்மா குருக்கள்

**ஆலய மங்கள இசை கலைஞர்**

சுவாமிமலை A.ராஜேஷ் (நாதஸ்வரம்)
திருமருகல் B.பார்த்திபன் (நாதஸ்வரம்)

மேட்டுப்பாளையம் M.வினோத் (தவில்)
திருநெல்லிக்காவல் A.மணிகண்டன் (தவில்)

**என்றும் அம்பாள் பணியில்**
மஹாகுரு சிவஸ்ரீ. தியாகராஜாக்குருக்கள் கணஸ்சுவாமிகள்
பிரதம குருக்கள், அறங்காவலர் சபைத்தலைவர்

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

29 யூலை 2023 முதல் 04 ஆகஸ்ட் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராசா காசிலிங்கம்

யாழ்.ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராசா காசிலிங்கம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 06 ஆகஸ்ட் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு தம்பிராசா காசிலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு அப்புக்குட்டி செல்லத்துரை

தையிட்டி காங்கேசன்துறையப் பிறப்பிடமாகவும் யாழ்.நாச்சிமார் கோவிலடியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு அப்புக்குட்டி செல்லத்துரை அவர்களின் 31ம்நாள் நினைவு நாள் 30 யூலை 2023 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு அப்புக்குட்டி செல்லத்துரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 22வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விநாசித்தம்பி தங்கம்மா

புங்குடுதீவு 10ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 22வது ஆண்டு நினைவு நாள் 28 யூலை 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைவஞ்சலி



### திரு மயில்வாகனம் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு மயில்வாகனம் கணபதிப்பிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாள் 28 யூலை 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு மயில்வாகனம் கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் செஞ்சோலை இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

---

**முல்லைத்தீவு புனிதபூமி**
**அன்பு இல்லத்தின்**
**423 குழந்தைகளின்**
**வாழ்வுக்காகவும்**
**கல்வி மேம்பாட்டிற்காகவும்**
**உங்கள் அபிமான**
**ஈழநாடு பத்திரிகை நடாத்தும்**
**12வது ஆண்டு**
**இன்னிசை மாலையும்**
**இராப்போசன விருந்தும்**
**29 ஒக்டோபர் 2023 ஞாயிற்றுக்கிழமை**
**தொடர்புகளுக்கு:-**
**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




29 யூலை 2023 சனிக்கிழமை செல்வன் கனடாவில் வாழும் Rennen பிறேம்ஜி இறைவனுக்கு நன்றி தெரிவித்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்



30 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமை தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் யாழ்.நாச்சிமார் கோவிலடியை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு அப்புக்குட்டி செல்லத்துரை அவர்களது 31ம்நாள் நினைவுநாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




30 யூலை 2023 ஞாயிற்றுக்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பிறிக்டிக்கா சுகுமார் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



02 ஆகஸ்ட் 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



28 யூலை 2023 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு மயில்வாகனம் கணபதிப்பிள்ளை அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



28 யூலை 2023 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 22வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்


ஓ

கனடா இந்து மாமன்றம்

CANADA HINDU MAAMANTRAM

## கனடா இந்து மாமன்றம்

கனடா இந்து மாமன்றம் இதுவரை களிப்புடன் படைத்திருந்த சர்க்கரைப் பொங்கல் ஆண்டு விழா தவிர்க்கமுடியாத காரணங்களால் தாமதமாகி இவ் ஆண்டின் பொங்கல் விழா, "சிவநெறிக் காவலர்" அமரர் நந்தீஸ்வரர் அவர்களின் நினைவாஞ்சலி நிகழ்வுடன், தேனாய் சுவைக்கும் இன்னிசை, மனதைவயப்படவைக்கும் வீணாகானம், மற்றும் கண்களுக்கு விருந்தாகும் நடனம் போன்ற சிறப்பு மிக்க கலை நிகழ்சிகளுடன் விழா இனிதே நிகழ ஏற்பாடாகியுள்ளது.

காலம்: August 12, 2023 சனிக்கிழமை மாலை 6:00 - 9:00 மணி வரை
இடம்: "தமிழ் கலை அரங்கம்", தமிழிசைக் கலா மன்றம்,
1120 Tapscott Road, Scarborough

அனுமதி இலவசம்

# கனடா அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்



## CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada
Tel: 416-321-6104 | Fax: 416-321-7557
www.ayyappan.com

## கொடியேற்ற மஹோற்சவ விஞ்ஞாபனம் (ஐயப்பன்)
## ஐயனார் அலங்கார உற்சவம்
## (அனலைதீவு ஐயனார் உற்சவ காலம்)

**கொடியேற்றம் (ஐயப்பன்)**
23-07-2023 ஞாயிறு
காலை 11:00 மணி

**ஐயனார் உற்சவ ஆரம்பம்**
28-07-2023 வெள்ளி

**தேர்த்திருவிழா**
(ஐயப்பன், ஐயனார்)
05-08-2023 சனி

அபிசேகம்: காலை 7:00 மணி
பூசை: காலை 8:00 மணி
வசந்தமண்டப பூசை: காலை 9:00 மணி
தேர் புறப்பாடு: 11:00 மணி
பச்சை சாத்தல்: 12:00 மணி



**சப்பறம் (ஐயப்பன், ஐயனார்)**
04-08-2023 வெள்ளி
மாலை 7:30 மணி

**தீர்த்தம் (ஐயப்பன், ஐயனார்)**
06-08-2023ஞாயிறு

**அபிசேகம்**
காலை 8:30 மணி
வசந்தமண்டப பூசை 10:30 மணி
தீர்த்த உற்சவம் 11:00 மணி

**பூங்காவனம்:**
ஐயனார் திருக்கல்யாணம்
07-08-2023 திங்கள் மாலை

**வைரவர் மடை**
08-08-2023 செவ்வாய் மாலை

## கிரியா கால நேர விபரங்கள்

| காலை | | மாலை | காலை | | மாலை |
|---|---|---|---|---|---|
| 7:00 | நடை திறத்தல் | 4:30 | 10:30 | யாகபூசை, ஸ்தம்பபூசை | 7:00 மணி |
| 8:00 | பூசை | 5:00 | 11:30 | வசந்த மண்டப பூசை | 7:45 மணி |
| 9:00 | ஸ்நபனாபிசேகம் | 5:30 | 12:00 | சுவாமி வீதி உலா | 8:30 மணி |
| 10:00 | பூசை | 6:30 | 1:45 | நடை சாத்தல் | 9:15 மணி |

விழா காலங்களில் அடியார்கள் தவறாது ஆலயத்திற்கு வருகை தந்து விழாக்களைச் சிறப்பித்து ஐயப்பனின் திருவருள் பெற்றுச் செல்லுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். உற்சவத்திற்குரிய அபிஷேக, பூசைத் திரவியங்கள் ஆகியவற்றை அடியார்கள் தந்துதவலாம்.


SULLIVAN AUTO GROUP's
Tamil Fest
தமிழர் தெரு விழா
2023
POWERED BY
iConnect Mortgages
FREE ADMISSION!
AUGUST
26 & 27
TAMIL FEST
2023
MARKHAM RD
(BETWEEN MCNICOLL AVE.
& PASSMORE AVE.)
Largest Tamil Street Festival outside of Asia
FOR MORE INFORMATION PLEASE CONTACT
THE CANADIAN TAMIL CONGRESS AT
416-240-0078
INFO@CANADIANTAMILCONGRESS.CA
WWW.TAMILFEST.CA
TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
Formula Honda
NISSAN
POWERED BY
iConnect Mortgages
HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
SUPPORTED BY
Canada
TORONTO
MARKETING PARTNER
PRINT FAST
ZONE SPONSORS
COMPUTEK COLLEGE
HOMELIFE
NAVA WILSON LLP
PRADON
TD
VIBRANT HOSPITALITY GROUP
WOW! WING
MEDIA SPONSORS
ATN
CMR
metroland

தெரியாத ஒருத்தர கல்யாணம் பண்ணைச் சொல்லி வற்புறுத்தும் கல்யாண தரகர்களிடம் உங்கள் நேரத்தையும், காசையும் வீணாக்காதீர்கள்!

புதிதாக அறிமுகம் செய்யும் ‘தமிங்கிள்’ தனியாக வாழ்பவர்களை சந்தித்து மகிழ்ச்சியுடன் பேசி பழக உதவும் ஒரு உச்சக் கட்ட தமிழ் டேட்டிங் அனுபவம்.

உங்கள் மனதிற்கு பிடித்தவர்களுடன் நமது ‘குக் ஸூ மிங்கிள்’ நிகழ்ச்சியில் ஒரு கொண்டாட்டம் செய்வதை நினைத்து பாருங்கள்,

அங்கே நமது சமையல்காரரர் ஒரு அறுசுவையான ஆட்டுக் கறி எப்படி சமைப்பது என்று அருமையாகச் சொல்லிக் கொடுப்பார்.

நமது *@Tamingle.dates* இன்ஸ்டாகிராம் பக்கத்திற்கு சென்று டொராண்டோ பூராகவும் நடக்கவிருக்கும் நம் நிகழ்ச்சிகளில் உங்களுக்கு பிடித்த நிகழ்ச்சிக்கு இப்பொழுதே டிக்கட் வாங்கிக் கொள்ளுங்கள்.

அத்துடன் நாம் உங்கள் அடையாளத்தை இரகசியமாக பேணுவோம் நாம் எப்பொழுதும் நமது பங்கேற்பாளர்களின் புகைப்படங்களை காட்சிப்படுத்த மாட்டோம்.

எதற்காக சலிப்பு தரும் நிச்சிய திருமணத்திற்கு ஒப்புக் கொள்கிறீர்கள்? தமிங்கிள் மூலமாக உங்கள் காதல் வாழ்க்கையை இப்பொழுதே அழகாக்கிக் கொள்ளுங்கள்!

**ஆகஸ்ட் 19, 2023**

**@ 3875 McNcnicoll Ave**

**Scarborough**




Don't waste any more time and money on marriage brokers who fail to deliver results and pressure your son/daughter into marrying a stranger!

Introducing Tamingle - the ultimate Tamil dating experience that will have you meeting and mingling with other singles in a fun and interactive way.

Imagine cooking up a storm with a potential match at our Cook & Mingle event, where a chef will teach you how to make delicious Mutton Curry together!

Check out our Instagram page @Tamingle.dates to see the list of upcoming events all over Toronto, and purchase your tickets to the ones that catch your eye.

Plus, we respect your privacy - Tamingle doesn't publicly display photos of our participants, so you can rest easy knowing that your personal life remains private.

So why settle for a boring arranged marriage? Spice up your dating life with Tamingle!

**Next Event: August 19, 2023**

**12.00 - 2.00 PM - 50.00 $**

**@ 3875 McNcnicoll Ave**

**Scarborough**

# அணில் கட்டிய பாலமும் ரணில் கட்டாத பாலமும்!

ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பு திட்டங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே பலாலியிலிருந்து மீனம்பாக்கத்திற்கும், காங்கேசன்துறையில் இருந்து தமிழ் நாட்டுக்கும், மன்னாரியிலிருந்து தமிழ் நாட்டுக்கும் என மூன்று திட்டங்கள் யோசிக்கப்பட்டன.



இந்தக் கடல் வழிப்பிணைப்பு, வான் வழிப் பிணைப்பு, என்பவற்றோடு, தரை வழியாக ஒரு பாலத்தை கட்டுவது குறித்தும் பரிசீலிக்கப்படுகிறது. இவை தவிர ரணிலின் விஜயத்தின் பின்னணியில் இந்திய வெளியுறவுச் செயலர் தெரிவித்த கருத்துக்களின்படி கடல் வழி, வான்வழி, தரைவழிப் பிணைப்புகளோடு வர்த்தகப் பிணைப்பு, எரிசக்திப் பிணைப்பு, பொருளாதாரப் பிணைப்பு, டிஜிட்டல் பிணைப்பு, மின்சக்திப் பிணைப்பு, எரிபொருள் வினியோக குழாய்வழிப் பிணைப்பு என்றிவ்வாறாக பல்வேறு வகைப்பட்ட பிணைப்புகளைக் குறித்தும் பேசப் பட்டிருக்கிறது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான புவியியல் அருகாமை காரணமாக ஏற்கனவே இருநாட்டு மக்கள் கூட்டங்களுக்கும் இடையே கலாச்சார பிணைப்புகளும் மதம் சார்ந்த பிணைப்புகளும் உண்டு. ஒரு இந்திய இராஜதந்திரி தனிப்பட்ட உரையாடலின் போது சொன்னார், இப் புவியியல் அருகாமையும் அது சார்ந்த பிணைப்பும் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்கள மக்களுக்கும் பொருந்தும் என்று. உண்மை. இப்பொழுது மிலிந்த மொரகொட அதைத் தான் புதுப்பிக்க முயற்சிக்கின்றார்.

அதாவது வட இந்தியாவுக்கும் பௌத்தத்துக்கும் இடையிலான பிணைப்பைக் கையாண்டு அவர் சிங்கள மக்களை பாரதிய ஜனதாவோடு சென்றி மென்ரலாகப் பிணைக்க முயற்சிக்கின்றார். ஆனால் ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையிலான பிணைப்பு ஆழமானது. பரந்தகன்ற பரிமாணங்களைக் கொண்டது. ஈழத் தமிழர்களையும் தமிழகத்தையும் பிரிப்பது ஒடுங்கிய பாக்கு நீரிணையாகும். பாக்கு நீரினையை அதன் பிரயோக வடிவத்தில் சொன்னால் அது ஒரு தமிழ் நீரிணை தான். அல்லது தமிழ் வாவி தான். அந்த நீரிணையின் இருபுறமும் தமிழர்கள் உண்டு.

நவீன அரசியலின் சர்வதேச எல்லைகளால் பிரிக்கப்படுவதற்கு முன்பு, அது ஒரு தமிழ்க் கடலாகத் தான் காணப் பட்டது. ஈழப்போரின் போதும் அது அவ்வாறு தான் காணப்பட்டது. ஈழப் போரின் பலம் அதுதான் என்று மு.திருநாவுக்கரசு கூறுவார்.

இவ்வாறு ஒடுங்கலான தமிழ் நீரிணையால் பிரிக்கப்பட்ட இரு வேறு தமிழ்ச் சமூகங்களுக்கும் இடையிலான பிணைப்பு எனப்படுவது சிங்கள மக்களுக்கும் வட இந்தியாவுக்கும் இடையிலான பௌத்த பண்பாட்டுப் பிணைப்பை விடவும் ஆழமானது. உடனடியானது. வரலாற்றில் வெவ்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்தியது.

இப்பிணைப்புக் காரணமாகத் தான் ஈழப்போர் அதன் அடுத்த கட்ட வளர்ச்சியை அடைந்தது. அதுமட்டுமல்ல தமிழகத்தில் மொத்தம் 19 பேர் ஈழத் தமிழர்களுக்காக தீக்குளித்திருக் கிறார்கள். இவர்களில் யாருமே திருகோணமலையில் இருக்கும் எண்ணெய் குதங்களுக்காகவோ அல்லது பலாலி விமான நிலையத்தை திற என்று கூறியோ அல்லது காங்கேசன் துறைக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையில் கப்பலை விடு என்று கேட்டோ அல்லது கலாச்சார மண்டபம் ஒன்றை கட்டிக் கொடு என்று கேட்டோ அவர்கள் தீக்குளிக்கவில்லை. தமிழர்களுக்கு ஒன்று என்றதும் அவர்கள் தீக்குளித்தார்கள். ஈழத் தமிழர்கள் அந்த 19 பேரின் சாம்பலையும் கடந்து சென்று அதாவது தமிழகத்தைக் கடந்து சென்று அரசியல் செய்வது கடினம். இவ்வாறாக, ஈழத் தமிழர்களுக்கு தமிழகத்தோடு உள்ள




ராஜதந்திர நலன்கள் கலக்காத பிணைப்பை, இந்தியா தனது புவிசார் அரசியல் நலன்களுக்காக பயன்படுத்தியது. அதன் விளைவாக ஈழப் போர் வளர்ந்தது. பின்னர் இந்தியா அதே புவிசார் நலன்களின் அடிப்படையில் இந்திய–இலங்கை உடன்படிக்கையைச் செய்த பொழுது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் கசந்தன. விளைவாக துரோணர்களுக்கும் அர்ச்சுனர்களுக்கும் இடையே மோதல்கள் வெடித்தன. ஈழப் போர் தமிழகத்திற்கும் விரிவடைந்தது.

அது பழைய கதை. புதிய கதை என்னவென்றால் ஈழப்போரின் இறுதிக் கட்டத்தின் பின் தமிழகத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான இடைவெளிகள் முன்னப் பொழுதையும் விட அதிகரித்துள்ளன என்பது தான். குறிப்பாக திராவிட கட்சிகளுக்கும் ஈழச் செயற்பாட்டாளர்களுக்கும் இடையே இடைவெளிகள் அதிகமாகி வருகின்றன. சமூக வலைத்தளங்களில் நடக்கும் வாதப்பிரதிவாதங்கள் அதைக் காட்டுகின்றன.

மிகக்குறிப்பாக நாம் தமிழர் கட்சியின் எழுச்சியோடு தமிழகத்தில் உள்ள பெரிய கட்சிகள் ஈழத் தமிழர் விவகாரத்தில் இருந்து சற்று ஒதுங்கி நிற்கும் ஒரு நிலைமை தோன்றியிருக்கிறது. மேலும் பாரதிய ஜனதாவின் தமிழக அமைப்பாளர் தனது உள்நாட்டு அரசியல் தேவைகளுக்காக ஈழப் போராட்டத்தை திராவிட கட்சிகளிடமிருந்து ஹைஜாக் பண்ண முற்படும் ஒரு நிலைமையும் வளர்ந்து வருகிறது. இதில் கடந்த வாரம் ரணில்–மோடி சந்திப்பையொட்டி தமிழக முதல்வர் டெல்லிக்குக் கடிதம் எழுதியது ஒரு மாற்றம்.

அதாவது 2009க்கு முன்னைய நிலைமைகளோடு ஒப்பிடுகையில் இப்பொழுது தமிழகத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இடையிலான உறவுகள் ஒப்பீட்டளவில் சோதனைக்கு உள்ளாகி வருகின்றன. புவியியல் அருகாமை, இன அருகாமை,மொழி அருகாமை, பண்பாட்டு அருகாமை, மத அருகாமை போன்ற அருகாமைகள் காரணமாக பிணைக்கப்பட்டிருந்த மக்கள்,அரசியல் காரணங்களால் படிப்படியாகத் தூரமாகிச் செல்லும் ஒரு பின்னணியில், பாக்குநீரிணையின் இருபுறங்களிலும் காணப்படும் தமிழ்ச் சமூகங்களுக்கிடையிலான பிணைப்பைப் பலப்படுத்தக்கூடிய சில திட்டங்களை இந்தியா முன் வைத்தது. அத் திட்டங்களை புலம்பெயர்ந்த தமிழர் அமைப்பான பி.ரி.எப். ஊக்குவித்தது. பலாலியில் இருந்து ஒரு வான் வழியையும் காங்கேசன்துறையில் இருந்தும், மன்னாரில் இருந்தும் இரண்டு கடல் வழிகளையுந் திறப்பது மேற்படி பிணைப்புத் திட்டங்களின் நோக்கம். யாழ்ப்பாணத்தில் இந்திய நிதி உதவியோடு கட்டப்பட்டுள்ள கலாச்சார மண்டபமும் அதற்குள் அடங்கும்.

ஆனால் இலங்கை அரசாங்கம் இத் திட்டங்கள் அவற்றின் முழு வளர்ச்சி அடைவதை ஏதோ ஒரு விதத்தில் தடுத்து வருகின்றது. பலாலி விமான நிலையத்தை ஒரு சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்துவதற்கு அதன் ஓடு பாதையைப் பெரிதாக்க வேண்டும். அதற்கு இலங்கை அரசாங்கம் இன்றுவரை அனுமதிக்கவில்லை. சில டியுற்றி பிறீ மதுக்கடைகளைத் திறப்பதன் மூலம் பலாலியை சர்வதேச விமான நிலையமாகத் தரமுயர்த்தி விட முடியுமா? காங்கேசன் துறைக்கும் தமிழகத்துக்கும் இடையிலான கடல் வழி இன்றுவரை திறக்கப்படவில்லை. அது இதோ திறக்கப்படுகிறது என்று எத்தனை தடவைகள் கூறப்பட்டு விட்டது? மன்னாரிலும் அப்படித் தான். ஏன் அதிகம் போவான்? தமிழ் மக்களுக்கு என்று இந்தியா யாழ்ப்பாணத்தில் கட்டிக் கொடுத்த கலாச்சார மண்டபத்தை இன்றுவரை முழுமையாக இயங்க வைக்க முடியவில்லை.


கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –




அதற்கு வேண்டிய நிர்வாகக் கட்டமைப்பையும் உருவாக்க முடியவில்லை. அக் கட்டடத்தை தமிழ் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மாநகர சபையிடம் கொடுப்பதா? அல்லது மத்திய அரசாங்கத்தின் கீழ் வைத்திருப்பதா என்று முடிவெடுக்கப்பட்டு விட்டதா?

இப்படிப்பட்டதோர் பின்னணியில் இப்பொழுது மேலும் புதிய பிணைப்புத் திட்டங்கள் பற்றிச் சிந்திக்கப்படுகிறது. குறிப்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே தரை வழியைத் திறக்கும் நோக்கத்தோடு ஒரு பாலத்தைக் கட்டுவது பற்றிய முன்மொழிவை ரணில் விக்ரமசிங்க டெல்லியில் முன் வைத்திருக்கிறார். அவர் ஏற்கனவே இதுபோன்ற ஒரு முன்மொழிவை 2002–2004வரை பிரதமராக இருந்த போது இந்தியாவிடம் முன் வைத்திருக்கிறார்.

இவ்வாறு இலங்கையை இந்தியாவோடு ஒரு பாலத்தின் மூலம் இணைக்கும் திட்டத்திற்கு அவர் தாமாக முன் வந்து வாய்ப்பை வழங்கியதன் மூலம் இந்திய அரசாங்கத்தை ஏதோ ஒரு விதத்தில் வெற்றிகரமாகக் கையாள முயற்சிக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாம். சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறியுள்ள இச்சிறிய தீவை ஒரு பாலத்தின் மூலம் இந்தியாவோடு தொடுத்து விடலாம் என்று அவர் கேட்டுக் கொண்டதன் மூலம் இந்தியாவின் பாதுகாப்புசார் கவலைகளை நீக்க முயற்சிக்கிறார் என்றும் எடுத்துக் கொள்ளலாம். உங்களோடு எங்களைப் பிணைத்துக் கொள்ளும் ஒரு பாலத்தைக் கட்ட நான் தயார் என்ற செய்தியை அவர் இந்தியாவுக்கு வழங்கியிருக்கிறார். அதன்மூலம் இனப் பிரச்சினை தொடர்பில் இந்தியாவிலிருந்து வரக்கூடிய அழுத்தங்களை அவர் தவிர்த்திருக்கிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா?

ஆனால் நிச்சயமாக அப்படி ஒரு பாலத்தை அவர் கட்டப்போவதில்லை. அப்படிக் கட்டுவதற்கு சிங்கள பௌத்த கூட்டுஉளவியல் அனுமதிக்காது. அப்பாலம் கட்டப்பட்டால் இச்சிறிய தீவு இந்தியாவின் மாநிலமாகி விடும் என்ற அச்சம் சிங்கள பௌத்தர்களுக்கு உண்டு. அப்பாலத்தைக் கட்ட முற்பட்டால் 13–ஐ எதிர்ப்பது போல பிக்குகளும் அரசியல்வாதிகளும் எதிர்ப்பார்கள். அப்பொழுது எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொள்ளவில்லை, பிக்குகள் எதிர்க்கிறார்கள் என்று சொல்லி ரணில் கையை விரிப்பார். எனவே அதில் அவர் விசுவாசமாக இல்லை. இப்போதைக்கு மோடியை எப்படி வசப்படுத்துவது என்றுதான் அவர் சிந்திக்கிறார்.

தமிழ் நோக்குநிலையில், பாக்கு நீரிணையின் இரு புறங்களிலும் உள்ள இரண்டு தமிழ் சமூகங்களுக்கும் இடையிலான பிணைப்பைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்க, ரணில் விக்கிரமசிங்க, அரசுக்கும் அரசுக்கும் இடையிலான பிணைப்புத் திட்டங்களுக்குரிய யோசனைகளை முன்வைத்திருக்கிறார். அதாவது, சிங்களத் தீவுக்கு ஒரு பாலம் அமைக்கலாம் என்று தாமாக முன்வைத்து ஒரு

(22ம் பக்கம் பார்க்க)

# எப்படி இருக்கும் இந்தியாவின் எதிர்காலம்?

- வெ.சந்திரமோகன் -

இந்திய அரசியல் களம் புதிய காட்சிகளுக்குத் தயாராகிறது. ஒருபுறம் (Indian National Developmental Inclusive Alliance) மறுபுறம் என்டிஏ (தேசிய ஜனநாயகக்கூட்டணி)எனப் பெரும் படைகள் மோதவிருக்கும் 2024 மக்களவைத் தேர்தல் மிகுந்த கவனம் ஈர்க்கிறது. பிரதமராக மோடி பொறுப்பேற்ற பிறகு, பாஜகவின் நகர்வுகளுக்கு எதிர்வினையாகத் தான் எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகள் இருந்து வந்தன.




முதல் முறையாக, எதிர்க் கட்சிகளின் வியூகத்துக்கு எதிர்வினையாக பாஜக வெளிப்படையாகச் செயல்படத் தொடங்கியிருக்கிறது. எதிர்க்கட்சிகளின் கூட்டம் நடைபெற்ற நாளில், தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிக் கூட்டத்தை பாஜக ஒருங்கிணைத்ததே இதற்கு உதாரணம்.

ஒருவகையில், இதை பாஜகவின் பலவீனமாகப் பார்க்க முடியும் என்றாலும், எதிர்க் கட்சிகளின் வியூகத்தை முறியடிக்க அக்கட்சி முழுமூச்சாகத் தயாராகிறது என்றும் கொள்ள முடியும். மோடி யுகம்: 1998இல் காங்கிரஸுக்கு எதிராக பாஜக தலைமையில் உருவான என்டிஏ கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியது. வாஜ்பாய் பிரதமராகப் பொறுப்பேற்றார்.

எனினும், கூட்டணியில் ஏற்பட்ட சிக்கல்களால் 13 மாதங்களில் ஆட்சி கவிழ்ந்தது. 1999இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்ற இந்தக் கூட்டணியால், 2004 தேர்தலில் வென்று ஆட்சியைத் தக்க வைக்க முடியவில்லை. 2009இல் அத்வானியைப் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்திப் போட்டியிட்ட அக்கூட்டணிக்குத் தோல்வி தான் கிடைத்தது.

தீவிர இந்துத்துவம், வளர்ச்சி ஆகிய இரண்டு அம்சங்களுக்காகப் பேசப்பட்ட மோடி, 2014 தேர்தலில் முன்னிறுத்தப்பட்டார். அடிமட்ட மக்கள் வரை சென்றடையும் வகையிலான பேச்சாற்றல் கொண்ட மோடிக்கு அப்போது முதல் வெற்றிமுகம் தொடர்ந்தது. எனினும், சூழல் வேகமாக மாறிவருகிறது.

2019 தேர்தலில் பாஜகவுக்கு 37 வீத வாக்குகள் கிடைத்தன. இன்றைக்கு எந்தக் கூட்டணியிலும் சேராமல் ஒதுங்கியிருக்கும் பிஜுஜீ ஜனதா தளம், பகுஜன் சமாஜ் கட்சி, பிஆர்எஸ், தெலுங்கு தேசம், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் போன்றவற்றைத் தவிர்த்து, பல பிரதான கட்சிகள் 'இந்தியா' கூட்டணியில் இருக்கும் நிலையில், அவற்றின் மொத்த வாக்கு சதவீதம் மிக முக்கியமான காரணியாக 2024 தேர்தலில் அமையும். 2019 மக்களவைத் தேர்தலில், என்டிஏ 353 இடங்களைக் கைப்பற்றியிருந்தது (மொத்த வாக்குகள் 42 வீதம்).

இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகள் அந்தத் தேர்தலில் மொத்தமாக வென்ற இடங்கள் 134 தான். ஆனால், மொத்த வாக்குகள் 35 வீதம். எனவே இந்தக் கூட்டணியின் நகர்வுகளைக் கண்டு பாஜக பதற்றம் அடைந்திருப்பதில் ஆச்சரியமில்லை.

அதேநேரம், மொத்த வாக்கு சதவீதத்துக்கும் தொகுதிவாரியான வெற்றிக்கும் வித்தியாசம் உண்டு. அதை அந்தந்தத் தேர்தல் களத்தின் வெவ்வேறு காரணிகள் தான் தீர்மானிக்கின்றன.

### கூட்டணியின் முக்கியத்துவம்

2014க்குப் பின்னர் பாஜகவுக்குக் கிடைத்த வெற்றிகளுக்கு மோடியின் முகம் முக்கியக் காரணியாகச் சொல்லப்படுகிறது. ஆனால், இந்தியாவின் பிரதான எதிர்க் கட்சிகள் தேசியக் கட்சிகளும் பலம் வாய்ந்த மாநிலக் கட்சிகளும் ஒன்றிணைந்திருக்கும் இந்தத் தருணத்தில், மோடியின் பெயர் மட்டுமே செல்லுபடியாகிவிடாது. பாஜக இதை நன்றாகவே உணர்ந்திருப்பதால், இதுவரை பெரிதாகக் கண்டு கொள்ளப்படாத கூட்டணிக் கட்சிகள் இப்போது முக்கியத்துவம்

பெறுகின்றன.

என்டிஏ கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் 38 கட்சிகளில், 24 கட்சிகளுக்கு மக்களவையில் உறுப்பினர்களே இல்லை. இந்தியா கூட்டணியிலும் 10 கட்சிகள் மக்களவை உறுப்பினர்கள் இல்லாதவை. எனினும், வெற்றி வாய்ப்பு நழுவுவதைத் தவிர்க்க எல்லா பக்கமும் அணை போட வேண்டிய அவசியம் இரண்டு தரப்புக்கும் உருவாகியிருக்கிறது.

2004 மக்களவைத் தேர்தலுக்குப் பின்னரே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி உருவானது. 2009 தேர்தலில் அந்த வெற்றி தொடர்ந்தது. எனினும், காங்கிரஸைப் பொறுத்தவரை தேசிய அளவில் தேர்தலுக்கு முந்தைய கூட்டணியில் இத்தனைத் தீவிரம் காட்டுவது இதுவே முதல் முறை.

பாஜகவை வீழ்த்தியே ஆக வேண்டும் எனும் முனைப்பில் பிரதமர் பதவிக்கான போட்டியிலிருந்து விலகவும் தயார் எனக் காங்கிரஸ் சொல்வது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

### காத்திருக்கும் சவால்கள்

இந்தியா கூட்டணிக்குத் தலைமை வகிப்பது யார், ஒருவேளை வெற்றி பெற்றால் பிரதமர் யார் எனும் கேள்விகள் எழத் தொடங்கியிருக்கின்றன. பாஜக இதைப் பிரதானமான விமர்சனமாக முன் வைக்கிறது. பெங்களூரு கூட்டத்தில் முக்கியத்துவம் கிடைக்காததால் நிதீஷ்குமார் அதிருப்தியடைந்ததாகச் செய்திகளைப் பரப்புவதில் பாஜக ஈடுபடுகிறது.

அதேபோல, மேற்கு வங்கம், கேரளம் போன்ற மாநிலங்களில் இதுவரை நிலவி வந்த அரசியல் சமன்பாடுகளை அவ்வளவு எளிதில் கலைத்து, புதிய களத்தை உருவாக்கிவிட முடியாது.

மாநில அரசியல் களம் என்ற அளவில் காங்கிரஸ் கட்சிக்கும் திரிணமூல் காங்கிரஸ், ஆம் ஆத்மி ஆகிய கட்சிகளுக்கும் இடையிலான முரண்கள், தேசிய அளவில் எப்படிச் சரிசெய்யப்படும் என்பது முக்கியமான கேள்வி. மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜிக்கும் அம்மாநிலக் காங்கிரஸ் தலைவர் அதீர் ரஞ்சன் சௌத்ரிக்கும் எப்போதும் ஆகாது. உள்ளாட்சித் தேர்தல் வன்முறை தொடர்பாக இரண்டு கட்சிகளுக்கும் இடையே கடும் கருத்து முரண்கள் ஏற்பட்டது மிகச் சமீபத்திய அம்சம். பஞ்சாபில் காங்கிரஸைப் படுதோல்வி அடையச் செய்து ஆட்சியைக் கைப்பற்றிய ஆம் ஆத்மி, காங்கிரஸ் கட்சியினர் மீது பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதனால் அம்மாநிலக் காங்கிரஸார் அதிருப்தியில் ஆழ்ந்திருக்கின்றனர். பாஜக மிகச் சாதுரியமாக இதைச் சுட்டிக்காட்டியிருக்கிறது. இவற்றைச் சமாளிப்பது இந்தியா கூட்டணி எதிர்கொள்ளும் இன்னொரு சவால். அதேபோல், இந்த ஆண்டு தேர்தலை எதிர்கொண்டிருக்கும் ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களில் காங்கிரஸ் தலைவர்களுக்கு மத்தியில் நிலவும் பூசல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்படுவது அவசியம்.

தொகுதிப் பங்கீடு எந்த அளவுக்குத் திறம்படத் திட்டமிடப்படுகிறது என்பதைப் பொறுத்து தான் இக்கூட்டணியின் வெற்றிக் கணக்கு உறுதியாகும். இவ் விஷயத்தில் வழக்கமான கூட்டணியிலேயே பல பிரச்சினைகளைக் கட்சிகள் எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

இதுவரை அரசியல் களத்தில் எதிரிகளாகப் பாவித்துவந்த கட்சிகள், இப்போது கூட்டணி அமைத்துக் களம் காணும் போது, அடிமட்டத் தொண்டர்கள் மத்தியில் பகைமை நீடித்தால், தேர்தல் பணிகளில் சுணக்கம் ஏற்படும். கூட்டணி சார்பில் பாஜகவுக்கு எதிராக அல்லது என்டிஏ கூட்டணிக் கட்சிக்கு எதிராகப் பொது வேட்பாளரை நிறுத்தும் போது இந்தச் சிக்கல் பெரிய அளவில் எழலாம்.

### பயணங்கள் முடிவதில்லை

ராகுல் காந்தி மேற்கொண்ட ஒற்றுமை இந்தியா (பாரத் ஜோடோ) நடைப்பயணத்தின் மூலம் காங்கிரஸுக்குக் குறிப்பிட்ட அளவுக்கு வலிமை சேர்ந்திருப்பது மறுக்க முடியாதது தான். ஆனால், இது போல் பல நடைப்பயணங்கள், சுற்றுப்பயணங்களைக் காங்கிரஸ் தலைவர்களும், இந்தியா கூட்டணியின் பிற தலைவர்களும் மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

ஏனெனில் ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கும் பிரத்யேகப் பிரச்சினைகளைப் பிரதானமாக முன் வைத்துப் பிரச்சாரம் செய்யும் மோடியின் பாணியை எதிர்கொள்வது அத்தனை எளிதல்ல.

மணிப்பூரில் கிட்டத்தட்ட மூன்று மாதங்களாகக் கலவரம் நடைபெற்று வரும் நிலையில், இரண்டு பெண்கள் நிர்வாணமாக இழுத்துச்செல்லப்பட்ட சம்பவத்திலேயே எதிர்க்கட்சிகள் எவ்வளவு குரல் கொடுத்தாலும், அதை மிக எளிதாகக் கையாளும் மோடியின் பாணி அசாதாரணமானது.

நாடாளுமன்றத்துக்கு வெளியே அந்தச் சம்பவம் பற்றிப் பேசிய மோடி, விரைவில் தேர்தலைச் சந்திக்கவிருக்கும் ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களையும் மணிப்பூர் பட்டியலில் சேர்த்து விட்டது தனி சாமர்த்தியம். மதச்சார்பற்ற ஜனதா தளம், அகாலி தளம் போன்ற கட்சிகள் மீண்டும் பாஜகவை நெருங்க ஆரம்பித்திருக்கின்றன. ஆக, முன்பை விட அதிக எச்சரிக்கை உணர்வுடன் எதிர்க்கட்சிகள் இருந்தாலும் பாஜகவின் காய்நகர்த்தல்களை வெல்ல இன்னும் கூடுதலான ராஜதந்திரம் அவசியம். அதைப் பொறுத்து தான் இந்தியாவின் எதிர்காலம் அமையும்!



# தமிழர்களின் அரசியல் புரிதல்

சில தினங்களுக்கு முன்னர், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் யூலி சங், தமிழ் கட்சிகளின் தலைவர்களை சந்தித்திருந்தார். ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணத்திற்கு முன்பதாகவே இந்த சந்திப்பு இடம் பெற்றிருந்தது. இந்த சந்திப்பின் போது, எல்லாவற்றுக்கும் சர்வதேசத்தை அழைக்கக் கூடாதென்று அமெரிக்கத் தூதுவர் கூறியதாக செய்திகள் வெளியாங்கியிருந்தன. யுத்தம் முடிவுற்று 14 வருடங்களுக்கு பின்னர், அமெரிக்க தூதுவர் ஒருவர், இதனை தமிழ் கட்டுகளுக்கு சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.


இந்த சந்திப்பின் போது, சுமந்திரன் கூறியதாக சில விடயங்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன. அதில் ஒன்று, 13வது திருத்தச் சட்டத்தை வலியுறுத்தி, இந்தியாவிற்கு கடிதம் அனுப்பிய பின்னர், இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக சுமந்திரன் கூறியதாக செய்திகள் வெளியாகிருந்தன. ஆனாலும் அதனை மறுத்தும் அங்கு கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்தியாவின் நிலைப்பாட்டில் ஒளிவு மறைவு இருந்ததில்லை. 1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் இடம் பெற்ற காலத்திலிருந்து, இன்று வரையில், இந்தியாவின் நிலைப்பாடு ஒன்று தான்.

அதாவது, இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பது. அடுத்தது, வடக்கு கிழக்கை வரலாற்று வாழ்விடமாக கொண்டிருக்கும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்துவது. இந்த அடிப்படையில் தான் இந்திய-இலங்கை ஒப்பந்தம் இடம்பெற்றது. இதன் விளைவாகவே மாகாண சபை முறைமை உருவானது.

இந்த மாகாண சபை முறைமையின் அடிப்படையாக இருக்கின்ற 13வது திருத்தச்சட்டமே, தமிழர் விடயத்தில் இந்தியாவின் கொள்கை நிலைப்பாடாக இருக்கின்றது. இறுதியாக தமிழ் கட்சிகளின் தலைவர்களை சந்தித்திருந்த, இந்திய வெளிவிவகார அமைச்சர், கலாநிதி ஜெயசங்கர் இதனை தெளிவாக குறிப்பிட்டிருந்தார். அதாவது, 13வது திருத்தச்சட்ட விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் உங்களோடு நிற்கும். இதன் பின்னர் கடிதம் எழுதியதால், இந்தியாவின் நிலைப்பாடு மாறி விட்டதாக சுமந்திரன் குறிப்பிடுவதன் பொருள் என்ன?

எரிக் சொல்கெய்ம், தனது நேர்காணல்களில் ஒரு விடயத்தை குறிப்பிடுவார். விடுதலைப் புலிகள் அமைப்பு, இந்தியாவை சரியாக புரிந்து கொள்ளவில்லை. இப்போது நிலைமைகளை உற்று நோக்கினால், சுமந்திரன் போன்றவர்களுக்கும் இந்தியாவை புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது போலும். ஒரு பிராந்திய சக்தியின் நிலைப்பாட்டை கடிதங்கள் மூலம் மாற்றி விட முடியாது. அவ்வாறு நினைப்பதே அந்த சக்தியை குறைத்து மபிப்பிடுவதற்கு ஒப்பானது. தமிழ் கட்சிகளின் கடிதங்களில் தவறுகள் உண்டு. இதனை முன்னரும் இந்தக் கட்டுரையாளர் சுட்டிக் காட்டிருக்கின்றார்.

ஏனெனில், ஒரு நாட்டிடம் செல்லுகின்ற போது, அந்த நாட்டின் நிலைப்பாட்டை விட்டு விட்டு, எங்களின் ஆசைகளை முன் வைக்கக்கூடாது. இந்தியா ஒரு அறிவிக்கப்பட்ட நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்ற நிலையில், அதனை புறம் தள்ளும் வகையிலான சொற்களை பயன்படுத்தக் கூடாது. இந்த இடத்தில் ஒரு கேள்வியை சிலர் முன்வைக்கலாம். எங்களுடைய நிலைப்பாட்டை எதற்காக இந்தியாவிற்காக விட்டுக் கொடுக்க வேண்டும்? கேள்வியில் தவறில்லை. இதற்கு ஒரேயொரு பதில் தான் உண்டு. அதாவது, அவ்வாறாயின், நீங்கள் இந்தியாவிடம் செல்ல வேண்டியதில்லை. நீங்கள் விரும்புவதை நீங்கள் தான் அடைய வேண்டும். இன்னொரு நாட்டிடம் நாங்கள் உதவியை கோரும் போது, அந்த நாட்டின் கொள்கை நிலைப்பாட்டின் அடிப்படையை புரிந்து



கொண்டு தான், செல்ல வேண்டும். அமெரிக்காவிடம் நீங்கள் மனித உரிமை மற்றும் ஜனநாயகம் தொடர்பில் பேசலாம் ஆனால் அதனை சீனாவிடம் பேச முடியாது. எவரிடம் எதனை பேசுவதென்று தெரிந்து பேசுவதில் தான், ஒருவரது ராஜதந்திரம் அடங்கியிருக்கின்றது.

ஆனால் பழுத்த அரசியல்வாதியென்று சொல்லப்படும் சம்பந்தனால், ஒரு கடிதத்தைக் கூட சரியாக எழுத முடியவில்லை. யுத்தம் முடிவுற்று 14 வருடங்களின் பின்னர், இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டுமென்னும் பார்வை சற்று வலுவடைந்திருக்கின்றது. .


ஆனால் இந்த இடைப் பட்ட காலத்தில், மேற்குலகத்தை நோக்கிச் செல்வதிலும் குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை நோக்கிச் செல்வதிலுமே அனைவரும் கரிசனையை காண்பித்திருந்தனர். இவ்வாறானதொரு பின்புலத்தில், 14 வருடங்களுக்கு பின்னர், அமெரிக்க தூதுவர் அனைத்துக்கும் சர்வதேசத்தை அழைக்கக் கூடாதென்று, தமிழ் கட்சிகளை நோக்கி கூறுகின்றார்.

அவர் உண்மையைத் தான் கூறுகின்றார். ஆனால் தமிழ் தேசிய தரப்புக்களால் தான் விடயங்களை ஆழமாக புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றது. புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றதா அல்லது, புரிந்து கொள்ள அவர்கள் விரும்பவில்லையா? இதில் அரசியல்வாதிகள் மட்டுமல்ல ஆய்வாளர்கள், புத்திஜீவிகள் என்போரும் அடக்கம். இப்போதும் சர்வதேச ரீதியாக தமிழர்களுக்கு வாய்ப்புக்கள் இருப்பதாகவும், தமிழர்கள் தங்களின் கோரிக்கைகளை வலுவாக முன்வைக்க வேண்டுமென்றும் சிலர் கூற முற்படுகின்றனர். இவர்கள் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போது தான், பேச விரும்பினால் பேசுங்கள், இல்லாவிட்டால் எழுந்து செல்லுங்களென்று, சம்பந்தனை நோக்கி நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார். பேரம் பேசும் பலத்தில், தமிழர் தரப்பு, எந்தளவு பலவீனமாக இருக்கின்றதென்பதையே அது காண்பிக்கின்றது. இந்த இடத்தில் எங்களுடைய அரசியல் புரிதலிலுள்ள குறைபாடுகளை நாம் உற்று நோக்க வேண்டும். நமது ஆய்வுமுறையிலிருக்கும் வழமையை நாம் உற்று நோக்க வேண்டும். போலியான நம்பிக்கைகளை வழங்குவதை ஆய்வென்று கூறி திருப்திப் பட்டுக் கொள்ளும் சுயமோக ஆய்வுகளை நாம் புறம் தள்ளியே ஆக வேண்டும். சர்வ தேசமென்பது பலம் பொருந்திய நாடுகளாகும். இந்த நாடுகள் எனவயும் அவர்களது நீண்டக நலன்களை நிறுத்துப் பார்க்கமால் எந்தவொரு நகர்வையும் முன்னெடுப்பதில்லை.

அவர்களது நலன்களுக்கு தேவையெனில் அவர்களை எவரும் அழைக்க வேண்டியதில்லை. அவர்களே வருவார்கள். அவர்கள் சதா இயங்கிக் கொண்டிருப்பவர்கள். எப்போது எதனை முன்னெடுக்க வேண்டுமோ, அதனை அவர்கள் முன்னெடுப்பார்கள். தமிழர் விடயத்தை பொறுத்தவரையில் சர்வதேசமென்பது, முதலில் இந்தியாவாகும். இந்தியாவின் ஆதரவின்றி, தமிழர் விடயத்தில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படாது. இந்தியாவை மீறி, தமிழர் பிழச்சினையில் தலையீடு செய்யுமளவிற்கு இது உலகிற்கு ஒரு முக்கிய விடயமல்ல.

இந்திய இலங்கை ஒப்பந்தம் இடம் பெற்று 36 வருடங்களாகின்றன. இந்த 36 வருடங்களில், பல்வேறு விடயங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் இப்போதும், 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தும் விடயத்தைக் கூட அடைய முடியாதவர்களாகவே இருக்கின்றோம். இது நமக்குச் சொல்லும் செய்தியோ மிகவும் கனதியானது. ஆனால் நாங்களோ தொடர்ந்தும், கடந்த காலத்திலிருந்து, எதனையும் கற்றுக் கொள்ள மாட்டோமென்று அடம் பிடித்துக் கொண்டிருக்கின்றோம். இதன் காரணமாகத்தான், அமெரிக்கத் தூதுவர் உண்மையை சொல்ல வேண்டிவந்திருக்கின்றது.

சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க தூதுவர், சம்பந்தனை சந்தித்திருந்தார். அப்போது, சம்பந்தன் தூதுவருக்கு கூறியதாக ஒரு செய்தி வெளியாகியிருந்தது. அதாவது, தமிழர் பிரச்சினையில் அமெரிக்கா பார் வையாளராக இருக்கக்



கூடாது, மாறாக, பங்காளராக ஆக வேண்டும். ஆனால் அவரோ எல்லாவற்றுக்கும் சர்வதேசத்திடம் வரக் கூடாதென்று கூறியிருப்பதன் மூலம், பிரச்சினையை தீர்ப்பதற்கு மாற்று வழிகளை கண்டறியுங்களென்று கூறுகின்றார்.

கட்டுரையாளர்:-
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா -



இதற்கு முன்னர், கட்சிகளின் தலைவர்களை சந்தித்திருந்த அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான கீழ்நிலை அரசியல் செயலர் விக்டோரியா நூலண்டும், ரணில் விக்கிரமசிங்கவோடு பேசுமாறு தான் கூறியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான், 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தில், இந்தியாவின் ஆதரவை, தமிழ் கட்சிகள் கோருகின்றன. இந்த விடயத்தில் இந்தியா எந்தளவு தூரம் உடனடியாக அழுத்தங்களை தீவிரப்படுத்தும் என்னும் கேள்வியுண்டு. எனினும் இந்தியாவின் அழுத்தமில்லாமல், இந்த விடயத்தில் கொழும்பு முன்னோக்கி பயணிக்காது. அவ்வாறான சூழல் இருந்திருந்தால், அரசாங்கமே அதனை செய்திருக்க வேண்டும். அரசாங்கம் சில விடயங்களிலாவது முன்னேற்றத்தை காண்பிக்க வேண்டிய தேவையுண்டு. இந்த இடத்தையே தமிழர்கள் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். பந்தை அரசாங்கத்தின் பக்கமாக வீசி விட்டு, அமைதியாக இருக்க வேண்டியதே இப்போதும் தமிழ் கட்சிகள் செய்ய வேண்டியது. ஆனால் தமிழ் தேசிய கட்சிகளோ, தொடர்ந்தும் அரசாங்கம் எறியும் பந்தை பிடித்து, தங்களுக்குள் விளையாடிக் கொண்டிருக்கும் வேலையையே சிறப்பாக செய்து கொண்டிருக்கின்றனர். இப்போதும், ரணில், பொலிஸ் அதிகாரமென்னும் பந்தொன்றை தமிழ் கட்சிகளை நோக்கி வீசுகின்றார். இனி சிறிது காலம், தமிழ் கட்சிகள் அந்தப் பந்தை தங்களுக்குள் அடிப்பார்கள். அவ்வாறில்லாது முதலில் அமுல்படுத்தக் கூடியதை செய்து காட்டுங்கள். காணி ஆணைக்குழுவை நியமியுங்கள். பின்னர் ஏனைய விடயங்களை பார்ப்போம். இவ்வாறு தான் விடயங்களை அணுக வேண்டும். அவ்வாறில்லாது, அரசாங்கத்தின் நிகழ்சி நிரலுக்குள் சிக்கிக்கொண்டு, தேவையற்ற விவாதங்களை செய்துகொண்டிருக்கக் கூடாது. சுலோகங்களில் சுகம் காணும் அரசியலுக்கு தமிழர்கள் முற்றுப்புள்ளியிட வேண்டும்.

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை
ஜாதகம் பார்க்கப்படும்
கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, இலண்டன் வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில்.
பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.
சொன்னால் நடக்கும் வாக்கு சித்தி!
குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும் திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்.
கோ. காசிலிங்கம்
Phone: 437-925 5643 - Whatsapp: 437- 329 4164 - India: 0091 6384381120


# கனடாவின் மறுத்தான் அடி!

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



1983 ஜீலையில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைகள் அரங்கேற்றப்பட்டு நாற்பது ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும், தமிழர் விரோத மனநிலை தெற்கில் மாற்றமடையவில்லை.

1983 ஜீலை 24ஆம் திகதி மாலையில், தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட இடம் பொரளையில் உள்ள கனத்தை மயானம் தான்.

திருநெல்வேலி தாக்குதலில் கொல்லப்பட்ட 13 படையினரின் சடலங்களும் அங்கு கொண்டு வரப்பட்டு அடக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில் கனத்தையில் கூடியிருந்தவர்களால் தான் கறுப்பு ஜீலை கலவரங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அதே இடத்தில் கடந்த வாரம் நினைவு கூரலை முன்னெடுக்க முயன்ற போது, சிங்களப் பேரினவாதிகள் அதனைத் தடுத்தனர். அவர்களுடன் சேர்ந்த சில பொலிஸ் அதிகாரிகளும் தீபத்தை காலால் உடைத்து, 40 ஆண்டுகளைக் கடந்தும், அவர்களின் மனநிலை மாறவில்லை என்பதை உணர்த்தினர்.

கறுப்பு ஜீலையில் கொல்லப்பட்டவர்கள் தமிழ் மக்கள் அல்ல, விடுதலைப் புலிகள் தான் என்று இப்போது சிலர் புது நியாயம் கற்பிக்கின்றனர்.

கொழும்பிலும், தென்னிலங்கையிலும் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்து விட்டு அவர்களை புலிகள் என்று கூறுகின்றவர்கள், முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை நடக்கவில்லை. கொல்லப்பட்டவர்கள் எல்லாம் புலிகள் தான் என்று கூறியதை ஆச்சரியத்துடன் பார்க்க முடியாது.

உண்மையை மறைப்பதும், குற்றவாளிகளை பாதுகாப்பதும் இலங்கையில் நிறுவனமயப்படுத்தப்பட்ட கொள்கையாக பின்பற்றப்படுகிறது. அதனால் தான் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து, பாதிக்கப்பட்ட சமூகங்களின் பிரச்சினைகளை தீர்க்கப் போவதாக அரசாங்கம் கூறுகின்றதை தமிழ் மக்களால் நம்ப முடியவில்லை.

நல்லிணக்க ஆணைக்குழு நம்பகமானதாக இருக்க வேண்டும் என்பதுடன், அது குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கும் அதிகாரம் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

அது பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் பொறிமுறையாக இருக்க வேண்டுமே தவிர, இணக்கசபை போல அமைந்து விடக் கூடாது என்றே பாதிக்கப்பட்ட சமூகங்கள் வலியுறுத்துகின்றன.

கறுப்பு ஜீலையில் படுகொலை செய்யப்பட்டவர்களை புலிகள் என அடையாளப்படுத்தும் இலங்கையினால், எவ்வாறு பொறுப்புக்கூறலை உறுதி செய்ய முடியும் என்ற கேள்வி நீடிக்கிறது.

கறுப்பு ஜீலையை நினைவு கூரவே அனுமதிக்காத நாட்டில் எவ்வாறு கறுப்பு ஜீலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியும்?

கறுப்பு ஜீலைக் கலவரங்கள் பல்வேறு அரசியல் பொருளாதார, வாழ்வியல் மாற்றங்களை தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

தனிநாடு தான் தீர்வு என்று நம்பிய தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். இந்த நாட்டில் வாழவும் முடியாது, வாழவும் விடமாட்டார்கள் என்ற நிலைக்கு உள்ளான தமிழர்கள், வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தார்கள்.

அவர்கள் இன்று வலுவான புலம்பெயர் சமூகங்களாக பொருளாதார பலம் படைத்தவர்களாக மாறியுள்ளனர். அந்த மாற்றத்துக்கு அடிப்படைக் காரணமே, கறுப்பு ஜீலை கலவரம் தான்.

கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆண்டு தோறும் இலங்கை அரசுக்கு எரிச்சலூட்டுகின்ற அறிக்கைகளை வெளியிடவும் அதுதான் காரணம். அண்மையில் கூட கறுப்பு ஜீலையை முன்னிட்டு கனேடியப் பிரதமர் வெளியிட்ட அறிக்கையும், கொழும்பில் உள்ள கனேடிய தூதுவர் எரிக் வோல்ஷ் சமூக ஊடகங்களில் இட்டிருந்த பதிவும், சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் அதனை கண்டித்திருக்கிறார். வெளிநாடுகள் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட முனைவதாக அவர் குற்றம் சாட்டியிருக்கிறார். சரத் வீரசேகரவும் அதேகுரலில் எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறார்.



உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கு கனேடிய தூதுவருக்கு உரிமையில்லை என்றும், அவரை வேண்டாத நபராக அறிவித்து நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்றும் அவர் கோரியிருக்கிறார்.

அண்மைக்காலமாக அரசாங்கம் கனடாவின் நிலைப்பாட்டுக்கு எதிராகவே கருத்துக்களை வெளிப்படுத்துகிறது. இதனை கனடாவும் அறிந்திருக்கிறது என்பதை கனேடியப் பிரதமரின் கறுப்பு ஜீலை அறிக்கை உணர்த்தியிருக்கிறது.

இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமைகள் மீறல்களுக்கும், அத்துமீறல்களுக்கும், பொறுப்பு கூறப்பட வேண்டும் என நாம் இன்றும் தொடர்ந்து கோருகின்றோம். மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை கனடா ஒருபோதும் நிறுத்த மாட்டாது என்று கனேடியப் பிரதமரின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இது இலங்கை அரசின் அண்மைய அறிக்கைகள், பிரதிபலிப்புகளின் விளைவு தான். தென்னிலங்கையில் வெளியிடப்படும் கருத்துக்கள், எதிர்ப்புகள், மத்தியில் கனடா தனது நிலைப்பாட்டில் உறுதியாகவே இருக்கிறது.

கறுப்பு ஜீலைக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களை கடந்த வாரம் சந்தித்துப் பேசியிருந்தார் பிரதமர் ட்ரூடோ.

இதற்குப் பின்னர் தான், கனடாவின் அறிக்கைகளும், செயற்பாடுகளும் நல்லிணக்கத்தையும் அமைதியையும் ஏற்படுத்த உதவாது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறியிருக்கிறார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் கனடாவுக்கும் இடையில் ஒரு இராஜதந்திர மோதல் உருவாகி வருகிறது என்பதை வெளிப்படுத்தும் இன்னொரு விடயமும் அரங்கேறியிருக்கிறது.

கடந்த புதன்கிழமை தனது அமைச்சரவையை மாற்றியமைத்த கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, லிபரல் கட்சியின் ஸ்காபரோ ரூஜ்பார்க் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான கெரி ஆனந்தசங்கரியை சுதேச உறவுகள் அமைச்சராக நியமித்துள்ளார்.

இந்த அமைச்சர் நியமனம் இடம் பெற்ற சூழல்முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஏனென்றால், கறுப்பு ஜீலை கலவரங்கள் நிகழ்ந்த 40 ஆண்டுகள் நிறைவடையும் சூழலில், அந்தக் கலவரத்தினால் கனடாவில் குடியேறி சக்தி வாய்ந்த புலம்பெயர் சமூகங்களில் ஒன்றாக மாறிய தமிழர்களின் சார்பில் தெரிவான உறுப்பினரை அமைச்சராக்கியிருக்கிறார் ட்ரூடோ.

கனேடிய அரசியல் வரலாற்றில் இலங்கைத் தமிழர் ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டது இதுவே முதல்முறை. அதுவும், கெரி ஆனந்தசங்கரிக்கு இலங்கை அரசாங்கம் வீசா வழங்க மறுத்த பின்னர் தான் இந்த நியமனம் இடம்பெற்றிருக்கிறது. கனேடிய நாடாளுமன்றத்தில் இனப்படுகொலை நாள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு காரணம் என்று கெரி ஆனந்தசங்கரி மீது இலங்கை அரசாங்கம் வெறுப்புடன் உள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளாக மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக பயணத் தடையை கனடா அறிவித்த பின்னர், இந்த வெறுப்பு இன்னும் அதிகரித்திருக்கிறது. பொறுப்புக்கூறலையும், நீதியையும் கனடா வலியுறுத்துவதும் கொழும்புக்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது.

இதனால் தான், கனடாவின் செயற்பாடுகளுக்கு காரணமானவர் என்று கெரி ஆனந்த சங்கரியை இலங்கைக்கு வருவதற்கு அரசாங்கம் தடை விதித்தது. இலங்கைக்கு வருவதற்கான தடை தொடர்பான தகவலை கெரி ஆனந்தசங்கரி, வெளியிட்ட நிலையில் தான் அவரை அமைச்சராக நியமித்திருக்கிறார் பிரதமர் ட்ரூடோ.


கனேடிய அமைச்சர் ஒருவர் இலங்கை வருவதற்கு அரசாங்கத்தினால் தடை போட முடியாது. அவ்வாறு தடை போட்டால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

கெரி ஆனந்தசங்கரி அமைச்சராக நியமிக்கப்பட்டது, இலங்கைக்கு அழுத்தங்களை இன்னும் அதிகரிக்கும். இது கனடாவின் ஒரு இராஜதந்திர நடவடிக்கை மாத்திரம் அல்ல.

அவர் இலங்கைக்கு வருவதற்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிரான ஒரு எதிர்வினையும் கூட.

பொறுப்புக்கூறலையும் நீதியையும் கனடா வலியுறுத்துகின்ற நிலையில், கனடாவுடன் இலங்கை முரண்படுவதும் முட்டிக் கொள்வதும், கொழும்புக்கு சிக்கலையே ஏற்படுத்தும். கெரி ஆனந்தசங்கரியின் அமைச்சர் நியமனமும் அதற்கான அறிகுறிகளையே வெளிப்படுத்துகிறது.

# இலங்கையில் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டும்! அவசியத்தை மீண்டும் வலியுறுத்திய கனடியத் தூதுவர்



கனடாவில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் அந்நாட்டுக்கு வழங்கிவரும் மிகையான பங்களிப்பு குறித்து நினைவுகூர்ந்துள்ள இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர், இலங்கையில் நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட வேண்டியதன் அவசியத்தை மீளவும் வலியுறுத்தியுள்ளார்.

கனேடிய தமிழர் பேரவையினால் தொடர்ந்து 15ஆவது ஆண்டாக இவ்வருடம் நடத்தப்படவுள்ள 'கனேடியத் தமிழர் நிதிசேர் நடை' மற்றும் அதனூடாகத் திரட்டப்படும் நிதியின் மூலம் வழங்கப்படவுள்ள உதவி என்பன பற்றித் தெளிவுபடுத்தும் நோக்கிலான ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு, மரதா ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அச்சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஷ் மேற் குறிப்பிட்டவாறு வலியுறுத்தினார்.

அதன்படி முதலில் கனேடியத் தமிழர் பேரவையின் செயற்பாடுகள் பற்றிக் கருத்து வெளியிட்ட அவர், அப்பேரவை தமிழ்மக்களின் நலனை முன்னிறுத்தி உண்மையான அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றுவதாகக் குறிப்பிட்டார்.

மேலும் கனடாவில் வாழும் புலம்பெயர் தமிழ்மக்கள் அந்நாட்டின் மேம்பாட்டுக்கு பெருமளவான பங்களிப்பை வழங்கியிருப்பதாகச் சுட்டிக்காட்டிய உயர்ஸ்தானிகர், அதன் நீட்சியாக கனேடிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் தமிழர் இடம்பிடித்திருப்பது குறித்தும் பிரஸ்தாபித்தார்.

அதேவேளை இலங்கையுடன் கனடா மிகநெருக்கமாகப் பணியாற்றி வருவதாகவும், அனைத்து வழிகளிலும் இலங்கை நன்மையடைவதையே தாம் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி கனேடியப் பாராளுமன்றத்தில் தமிழினப் படுகொலை நினைவுநாள் அங்கீகரிக்கப்பட்டிருப்பது பற்றிக் குறிப்பிட்ட எரிக் வோல்ஷ், இலங்கை நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கிப் பயணிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அத்தோடு இலங்கையால் அதனைச் செய்ய முடியும் என்றும், ஏனெனில் இலங்கையிடம் பல்வேறு நேர்மறையான கூறுகள் காணப்படுவ தாகவும் அவர் தெரிவித்தார்.

# இலங்கைத்தீவின் அரசியலில் சர்வதேச சக்திகளின் எல்லையும் தலையீடும்

கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
– K.T.கணேசலிங்கம் –



இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வில் அமெரிக்கா– இந்தியாவின் பங்கு அதிகமானதாகவே காணப்படுகிறது. இனப்பிரச்சினையை ஆயுதப் போராட்டமாக மாற்றியதில் இந்தியாவுக்கு அதிகமான பங்கு உண்டு என்பதை மறுக்க முடியாது. அவ்வாறே அதன் தீவிர ஆயுதப் போராட்டத்தை கையாளவும் முடிவுக்கு



கொண்டு வரவும் அமெரிக்காவின் பங்களிப்பு இல்லை என விவாதிக்க முடியாது. உலகளாவிய ரீதியில் நாடுகளின் அரசியல் பொருளாதார இராணுவ விடயங்களில் தலையீடு செய்வதில் அமெரிக்காவுக்கு தனியான பங்குண்டு. ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா என்பது மட்டுமன்றி சமகாலத்தில் உக்ரையினுங்கு அமெரிக்கா வழங்கும் ஆயுதங்களும் நிதி உதவியும் எப்படியானதென்பது தெரிந்த விடயமே. அமெரிக்காவின் அரசியலே சர்வதேச அரசியல் தான். அது அரசியலாக மட்டுமல்ல பொருளாதாரமாக இராணுவமாக உலக நாடுகளுக்குள்ளே இயங்குகிறது. இக் கட்டுரையும் தமிழ் அரசியல் கட்சிகளை சந்தித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் வெளிப்படுத்திய கருத்தின் யதார்த்தத்தை தேடுவதாக அமையவுள்ளது.

அனைத்துவிடயங்களுக்கும் சர்வதேசம் நலையிட வேண்டும் என்று கூறாதீர்கள். சர்வதேச நாடுகளுக்கும் சில வரையறைகள் உண்டு என்று தமிழ் தேசியக் கட்சிகளின் தலைவர்களை சந்தித்த போது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜீலி சங் தெரிவித்துள்ளார்.

இதே கருத்தினை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரட்ண கொக்கிளாய் மனிதப் புதைகுழி தொடர்பில் முன் வைக்கும் போது (13.07.2023) தமிழ் அரசியல்வாதிகளுக்கு விண்ணப்பம் செய்திருந்தார். அதாவது எடுத்தற்கெல்லாம் சர்வதேச விசாரணை, சர்வதேச கண்காணிப்பைக் கேட்பது சிறுபிள்ளைத்தனமானது அவ்வாறு செய்யாதீர் என்று தமிழ் அரசியல்வாதிகளை கோரியுள்ளார்.

இரண்டுமே ஒரே கருத்தாக உள்ளது. இதில் இலங்கை தீவின் அரசியல் மற்றும் நிர்வாகத் தரப்பு அத்தகைய கருத்தைக் கொண்டிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதே. ஆனால் ஒரு வல்லரசு நாட்டின் தூதுவர் அவ்வாறு அனைத்திற்கும் சர்வதேசம் தலையிட வேண்டும் எனக் கூறுவது தவறெனக் தெரிவிப்பதே வினேதமாக உள்ளது.

முதலில் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் அவ்வாறு கோருவதற்கான நியாயப்பாட்டை புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை அரசியலுக்குள் சுதந்திர காலம் முதல் இனப் பிரச்சினையை தீர்க்கும் முகமாக பல உடன்படிக்கைகள் புரிந்துணர்வு உடன்பாடுகள், பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ,றுதியில் இந்தியா இலங்கையுடன் இனப்பிரச்சினையை தீர்க்கும் முகமாக ஓர் உடன்பாட்டை எட்டியிருந்தது. அவை எதுவுமே அமுல்படுத்தப்படாதது மட்டுமன்றி அரசியலமைப்புக்கு உட்பட்ட பதின்மூன்றாவது திருத்தச்சட்ட மூலத்தையும் முழுமையாக அமுலாக்காது 35 வருடங்களுக்கு மேலாக கையாண்டுள்ளது. அதற்கு புறம்பாக உள்நாட்டுக்குள்ளேயே ஓரினத்தின் மீது பெரும் போரை நிகழ்த்தியதுடன் தமிழர் மீது பாரிய அழிப்புகளை மேற்கொண்ட வரலாற்றை நினைவு கொள்வது தவிர்க்க முடியாதது. அதனையே தமிழ் கட்சிகள் தமது அனுபவமாகக் கொள்கின்றனர். இதனாலேயே சர்வதேசம் நோக்கிய நகர்வை தமிழ் அரசியல் கட்சிகள் முதன்மைப்படுத்துவதற்கு காரணமாகும். ஒரு தேசிய இனத்தின் இருப்பும் பாதுகாப்பும் சர்வதேச சட்டத்தில் தங்கியுள்ளது என்பது மட்டுமன்றி அத்தகைய சர்வதேச சட்டமே ஒடுக்கப்படும் தேசியங்களின் சுயநிர்ணயத்தை அங்கீகரித்தது. சர்வதேசத்தின் அனுசரணையுடனேயே தேசிய இனங்களின் விடுதலையும் பாதுகாப்பு சாத்தியமாகிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சுதந்திரத்திற்கும் அப்பிராந்தியத்திலுள்ள தேசியங்களின் பாதுகாப்புக்கும் அமெரிக்காவின் பங்களிப்பு முதன்மையானது.

அதனை இ,லங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் விளங்கிக் கொள்ளாதவராக இருக்கிறார் என்பதை ஏற்றுக் கொள்வது கடினமாக உள்ளது. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்னர் கிழக்கு ஐரோப்பிய தேசியங்களுக்கு ஏகாநிபத்தியம் காலவலனாக இருந்துள்ளது. குருத்திஸ் தேசிய இனத்தின் ஈராக்கை மையப்படுத்தி அமைந்துள்ள சுயாட்சிக் கட்டமைப்புக்கும் அமெரிக்காவே பிரதான காரணமாக உள்ளதென்பதை மறந்து விட முடியாது. உலகளாவிய தேசயங்களினது இருப்புக்கும் பாதுகாப்புக்கும் சர்வதேச நாடுகளே அடிப்படையான காரணமாக உள்ளது.

இது மட்டுமன்றி இதன் மறுபக்கத்தையும் சர்வதேச நாடுகளே கட்டமைக்கின்றன. அதில் அமெரிக்காவின் பங்களிப்பு அதீதமானது. சோவியத் யூனியனை வீழ்த்தி கிழக்கு ஐரோப்பிய நாடுகளை கூறு போட்டது போல் ஆக்கானிஸ்தான மீதும் ஈராக் மீதும் போரை மேற்கொண்டு மேற்கரிய நாடுகளையும் அவற்றின் வளங்களையும் சூறையாடியது சர்வதேச அரசியலேயாகும். தற்போதும் மேற்காசிய நாடுகளின் மோதலுக்கும் அழிவுகளுக்கும் பின்னால் வல்லரசுகளின் சர்வதேச அரசியலே காரணமாகும். உலகளாவிய ரீதியில் சர்வதேச நாடுகளின் தலையீட்டினாலேயே போர்களும் சமாதான அரசியலும் நிகழ்கின்றது. வல்லரசுகள் தமது நலனை பாதுகாக்கவும் தமது பொருளாதார இலக்கை அடையவும் இராணுவ அரசியல் ரீதியில் தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றன. அமெரிக்காவின் மத்திய அரசின் அரசியலமைப்பு தமது நாட்டின் கட்டமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்ததை விட உலகத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தது அதிகம் என்பதை நிராகரித்து விட முடியாது.

அமெரிக்காவின் வெளியுறவும், அதன் புவனாய்வுத் துறையும், இராணுவ கட்டமைப்பான பென்டகனும் உலகளாவிய ரீதியான வலையமைப்பினைக் கொண்டவை என்பது தெரியாத விடயமில்லை. 2022 கணிப்பின்படி அமெரிக்காவுக்கு வெளியே உலகளாவிய ரீதியில் நிறுத்தப் பட்டுள்ள அமெரிக்க இராணுவத்தின் தொகை 1.18 மில்லியன் என்பதை கவனத்தில் கொள்வது அவசியமானது.

இது அமெரிக்காவின் தலையீடு இல்லை என விவாதிக்க முடியுமா என்பது பிரதான கேள்வியாகும். இது மட்டுமன்றி 80 நாடுகளில் ஏறக்குறைய 750 மேற்பட்ட இராணுவத் தளங்களைக் கொண்டுள்ளதாக தகவல்கள் உண்டு. இவற்றின் எண்ணிக்கை அதிகம் என்றும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவை எதனையும் அமெரிக்காவின் தலையீடு இல்லை என விவாதிக்க முடியுமா என்பது தவிர்க்க முடியாத கேள்வியாகும்.

இலங்கைத்தீவில் அரகளய போராட்டம் (அக்டோபர் புரட்சி என்கிறார்கள்) ஆட்சி மாற்றத்திற்கு அடிப்படையில் செயல்பட்ட நாடுகளின் பட்டியலில் சர்வதேச நாடுகளே காணப்படுகின்றன. அந்த நாடுகளின் ஆதரவே புரட்சிக்கு வழி வகுத்ததாக குற்றச்சாட்டு உண்டு. அவ்வாறே 2010 ஆண்டு ஆட்சி மாற்றத்திற்கும் சர்வதேச நாடுகளே காரணம் என்பதை மறுக்க முடியாது. அவ்வாறாயின் சாவதேசத்தின் எல்லை எது என்பது உச்சரிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இலங்கைத்தீவில் சீனாவின் ஆதரவு பெற்ற ஆட்சியை விரட்டுவதே சர்வதேச நாடுகளின் (மேற்கு நாடுகள்) எல்லை போலவே தெரிகிறது. சீனாவுக்கு எதிராக மட்டுமே அமெரிக்கா இலங்கைத் தீவுக்குள் தலையீடு செய்யும் என்பது புலனாகிறது. அப்படியானால் ஏன் ஈழந்தமிழரது இனப்படுகொலை சார்ந்து அமெரிக்க காங்கிரஸூம், செனற்றிலும் விவாதிக்கிறார்கள் என்பது விளங்கவில்லை.

அவ்வாறே ஜெனீவாவில் வைத்து இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானங்களை ஏன் அமெரிக்கா முன்மொழிந்து நிறைவேற்றுகிறது என்பதும் புரியப்படவில்லை. இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் குறிப்பிடுவது சரியாக அமைந்தால் அமெரிக்காவின் நடவடிக்கைகள் அனைத்தும் போலித்தனமானவை. அல்லது ஏமாற்றுத்தனமானது என்பதை ஈழத்தமிழர் புரிந்து கொள்ள வேண்டுமென கூறுகின்றாரா?. அல்லது நிலமையை கையான முனைகிறாரா? அத்தகைய நிலமை எதுவென்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

ஒன்று, இலங்கைக்கான அமெரிக்க தூதுவருடனான தமிழ் கட்சிகளது சந்திப்பு ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை மையப்படுத்தியது. இந்தியத் தூதுவரும் அதே நோக்கத்துடனேயே பழைய(22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ரெலோ கூறுவது தவறானதா?

(5ம் பக்கத் தொடர்ச்சி) கூற்று அமைகின்றது. தமிழ் மக்களின் ஜனநாயக கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட சூழலில் தான், தனிநாட்டுக் கோரிக்கையை நோக்கி, தமிழ் மிதவாத தலைவர்கள் சென்றனர். அதனை அடைவதற்கான திட்டத்துடன் அவர்கள் தனிநாடு தொடர்பில் சிந்திக்கவில்லை.

மிதவாதிகளினால் நிலைமைகளை கையாள முடியாமல் போனபோதே, இளை ஞர்களின் ஆயுதத் தலையீடுகள் உருவாகின. அதுவே ஒரு உள்நாட்டு யுத்த மாக விரிவு கொண்டது.

இப்போது, அரசியலமைப்பிலுள்ள அதுவும் இரண்டு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தினால், உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கூட, தமிழ் மக்களோடு பகிர்ந்தளிக்க முடியாதென்று, சிங்கள ஆளும் தரப்பு கூறுமானால், அடுத்து என்ன தான் செய்வது? இந்தக் கேள்வியிலிருந்து சிந்தித்தால், அடைக்கலநாதன் கூறுவதுடன் ஏனையவர்களும் கைகோர்க்கத் தான் வேண்டிவரும். இது தொடர்பில் தமிழரசுக் கட்சியின், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் (முன்னணியின்) நிலைப்பாடு என்ன?

# நிலமும் மக்களும் இல்லாத சமஷ்டி யாருக்கு?

(7ம் பக்கத் தொடர்ச்சி) கலந்துரையாடல்களை தொடர்ந்து நடத்துவதா இல்லையா என கேட்டார்.

சுமந்திரன் கருத்தை சாதகமாக வைத்து குழப்ப வேண்டாம். சுமந்திர னுடைய கருத்தை சாதகமாக பயன் படுத்தி பதின்மூன்றை நடைமுறைப்படு த்தும் விடையங்களில் இருந்து நழு வக் கூடாது என தெரிவித்தேன்.

பதின் மூன்றை நடைமுறைப்படுத்து மாறு இந்தியாவை கோரிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்மந்தன் உடல்நல குறைவுக்காக சுமந்திரன் பங்கு பற்றியுள்ளார்.

அவரின் கருத்தை சாட்டாக வைத்து 13 நடைமுறைப்படுத்துவதில் இருந்து தாங்கள் விலகிக்கொள்ள பார்க்கிறீர்களா என ஜனாதிபதியிடம் கேட்டேன்.

அதற்கு அவ்வாறு இல்லை பதின் மூன்று தொடர்பில் எமது கலந்துரையாடல்களை முன்னோக்கி கொண்டு செல்வோம் நாங்கள் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுக்கு முன்னர் பேசுவோம் என்றார்.

ஆகவே தமிழ் மக்களின் அரசியல் அவிலாசைகளை பெற்றுக் கொள்வதற்கு தமிழ் மக்களின் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள 13வது திருத்தத்தை தமிழ் கட்சிகள் ஓரணியில் நின்று நடைமுறைப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# எது வரையில் வெளியாரின் தலையீடு?

(7ம் பக்கத் தொடர்ச்சி) எனவே வெளித்தலையீடுகள் ஓர் எல்லைக்குட்பட்டது. அது தொடர்ந்தும் தமிழ் மக்களுடன் கூடப் பயணிக்காது. இதனை புரிந்துகொண்டு, காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுதல் என்னுமடிப்படையில் விடயங்களை நோக்கவேண்டும். ஒரு வேளை காற்றின் வேகத்திற்கு ஏற்பவே விடயங்கள் சாத்தியப்படலாம். காற்று நாம் விரும்புகின்றமாதிரி சுழன்றடிக்க வேண்டுமென்று அடம்பிடித்துக் கொண்டிருப்பது புத்திசாலித்தனமானதல்ல.

# கனடா தூதுவரின் பகிரங்கக் கூற்றிலிருந்து

(5ம் பக்கத் ரொடர்ச்சி) புதிய சிந்தனைகள் உதிக்கின்றன. காலம் காட்டும் மாற்றங்களை ஏற்காவிட்டால், காலம் எம்மை தூக்கி வீசி விட்டு போய் கொண்டே இருக் கும். அது யாருக்காகவும் காத்திருக்காது. எனது பார்வை இது தான்.

நண்பர் எரிக் வோல்ஷ் தொடர்ந்தும் சொன்னார். பல்லின, பன்மத, பன்மொழி என்ற பன்மைத்துவதை நாம் கொண்டாடுகிறோம்'' என்று சொன்னார். இதுவே எமது பலம் என்று சொன்னார். அதையே அவருக்கு முன் பேசும் போது நானும் சொன்னேன். இவற்றை என் சமூக ஊடக தளங்களில் பாருங்கள்.

இலங்கை பன்மைத்துவ நாடு என்ற அடிப்படையை நாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்க கூடாது. அதுவே எமது எதிர்கால மீட்சிக்கு ஒரே வழி. எனது வழி. எமது வலியை போக்கும் வழி எனக் குறிப்பிட்டார்.

# பிரேசிலைச் சேர்ந்த உலகின் மிக

(6ம் பக்கத் தொடர்ச்சி) பெட்ரா பொனிடாவில் உள்ள காரிகோ டாஸ் பியால்ஹோஸ் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது. கோம்ஸின் திருமணச் சான்றிதழின்படி 1917ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ம் தேதி பிறந்தார். இவர், உலகப் போர்கள் மற்றும் மூன்று தொற்று நோய்களிலிருந்து தப்பியவர். கோம்ஸுக்கு ஏழு குழந்தைகள், 25 பேரக்குழந்தைகள், 42 கொள்ளுப் பேரக்குழந்தைகள் மற்றும் 11 கொள்ளுப் பேரக் குழந்தைகள் உள்ளனர்.

# காங்கேசன்துறை - நாகபட்டிணம் கப்பல் சேவை விரைவில் ஆரம்பம் என்கிறார் துணைத்தூதுவர்



இலங்கை யாழ்ப்பாணம் காங்கேசன்துறைக்கும் இந்தியா தமிழ்நாடு நாகபட்டினத் திற்கு இடையேயான கப்பல் சேவையினை விரைவில் ஆரம்பவுள்ளதாக யாழ் இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீமான் ராகேஷ் நடராஜ் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், ஆரம்பத்தில் காங்கேசன்துறை மற்றும் காரைக்கால் இடையே கப்பல் சேவை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்த நிலையில் தற்போது காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையே குறித்த பயணப்பாதை மாற்றப்பட்டமையினாலேயே இவ் தாமதம் ஏற்பட்டது.

குறித்த கப்பல் சேவை தொடர்பில் விரைவில் ஆரம்பிப்பதற்காக தமிழ்நாடு நாகபட்டினத்தில் பயணிகள் இறங்குமிடம் , சுங்கம் போன்ற அமைக்கும் பணிகளை இடம்பெற்று வருகின்றன. அப்பணிகள் நிறைவடைந்தமையுடன் கப்பல் சேவையினை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். அவ் கப்பல் சேவை தொடர்பிலான நல்லதொரு செய்தியினை மக்களுக்கு விரைவில் அறிவிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# ஆடி ஆட்டுமா? ஆடி அடங்குமா?

முந்தி ஜீலையில் ஆடிப்பிறப்பு வரும். அதுக்கென்டு ஒரு நாள் விடுமுறையும் வரும்.

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை. ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே! கூடிப் பனங் கட்டிக் கூழும் குடித்திடலாம்...' என்று பள்ளிச் சிறுவர்களெல்லாம் ஆடிப் பாடுவார்கள். ஆடிப்பிறப்பு அன்றைக்கு பள்ளிகள் மட்டுமல்ல அரசாங்க அலுவலகங்களிலும் விடுமுறை இருந்தது.

ஆடிப்பிறப்பன்று எல்லா வீடுகளிலும் கூழ் காய்ச்சப்படும். இந்தக்கூழ் மச்சக்கூழல்ல. பனங்கட்டிக்கூழ். கலவை ஏதுமில்லாத பனங்கட்டி வாசம் வீசும் இந்தக் கூழை வயிறு முட்டத் தமிழரெல்லாம் குடித்தார்கள். குடித்துக் கொண்டாடினார்கள். கூழுடன் கொழுக்கட்டையும் அவித்துத் தின்றார்கள்.

கூழைக் குடித்துக் கொண்டே தங்கத் தாத்தா என்ற சோமசுந்தரப்புலவரின் அந்தப் பாட்டைப் பாடினார்கள். கூழோடு கொழுக்கட்டையும் அவித்துக் கொண்டாடினார்கள்.

அப்போது ஆடிக் கூழுக்கொரு பாட்டும் ஒடியற்கூழுக்கு இன்னொரு பாட்டுமாக இரண்டு பாடல்கள் இருந்தன. அப்போதென்ன இப்போதும் அந்தப்பாட்டுகள் இருக்கின்றனதான். அதையெல்லாம் யார் தான் பாடுகிறார்கள்?

ஆடிப்பிறப்புக்கும் அந்தக் கூழுக்கும் நவாலி சோமசுந்தரப்புலவர் அருமையாகப் பாடி வைத்திருந்தார். ஒடியற் கூழைப் பற்றி 'ஆசுகவி கல்லடி வேலன்' என்ற வேலுப்பிள்ளை பாடியிருந்தார். இரண்டு பாட்டும் பாடப்புத்தகங்களிலும் இருந்தன.

ஆடியில் (ஜீலையில்)ஆடிப்பூரத் திருவிழா வரும். கொழும்பில் ஆடி வேல் விழா வரும். கதிர்காம யாத்திரை வரும் இப்படிப் பொதுவாகவே ஆடியென்றால் ஒரே கொண்டாட்டம் தான். கீரிமலைக்குப் போய் தந்தையர்க்குப் பிதிர்க்கடன் நிறைவேற்றும் ஆடி அமாவாசையும் ஜீலையில் தான் வரும்.

இது மட்டுமா 'ஆடிப்பெருக்கு' என்று ஒரு படமும் அந்த நாளில் வந்தது. ஏ.எம் ராஜா, ஜிக்கி பாடிய அருமையான பாடல்களும் அந்தப் படத்தில் இருந்தன. அதையும் தமிழர்கள் பார்த்து மகிழ்ந்தார்கள்.

ஆடித் தள்ளுபடி என்று பொருட்களில் விலைக் குறைப்பு. சலுகை எல்லாம் ஆடியில் சிறப்புத் தள்ளுபடியாக நடந்தன. இன்றைக்கும் ஆடித் தள்ளுபடி என்று தொலைக்காட்சிகளில் விளம்பரங்கள் போய்க் கொண்டிருக்கின்றன.

ஆடியில் தான் கிணறு வெட்டினார்கள். ஆடி என்பது கடுங்கோடையல்லவா. கடுங்கோடையில் கிணறு வெட்டினால் பிறகு எந்தக் கோடையிலும் தண்ணீர் வற்றாது என்பது ஒரு காரணமும் நம்பிக்கையும். 'ஆடிக்கிணறு ஆழக்கிணறு'.

'ஆடி விதை தேடி விதை' என்றொரு பழமொழியுமுண்டு. ஆடியில் விதை எடுத்தால் அந்த விதை நூறு வீதம் விளைச்சலைத் தரும் வினைத்திறனிருக்கும் என்பது அனுபவம். 'முளைதிறனும் விளைதிறனும்' ஆடிவிதைக்கு சிறப்பாக உண்டென்று விவசாயத்துறையாளர் சொல்கிறார்கள். தென்னை நாற்றுப் போடுவது கூட ஆடித் தேங்காயில்தான். ஏன், வீடு வேய்கிறது கூட அப்பொழுது ஆடியில் தான். கடுங்கோடையில் வீடு வேய்ந்தால் அடுத்து வரும் மாரியைத் தாக்குப் பிடிக்கும் என்பதால். அது பெரும் பாலும் ஓலை வீடுகள் இருந்த காலம்.

ஆடி மாதம் பற்றி இன்னுமுண்டு. ஆடிக் காற்றுக்கு அம்மியும் பறக்குமென்பார்கள். அந்தளவுக்கு ஆடியில் காற்றடிக்கும். கடைச் சோழகம். அந்தக்காற்றுக்கு குளம் குட்டையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கவே வற்றிவிடும். கடுங்கோடைக் காற்று. அனலாய் வீசும்.

இப்படி அடிக்கும் காற்று வைத்துத் தான் 'ஆடியிலே காற்றடித்தால் ஐப்பசியில் மழை பெய்யும்' என்று சொன்னார்கள் போலும்.

ஆடிக்காற்றை தமிழகத்தில் 'மேகாத்து' என்பர். ஒரு காலத்தில் ஆடி மாதத்தில் வெள்ளம் பாயக்கூடிய அளவுக்கு மழை பெய்ததாம். அதை வைத்துத் தான் 'ஆடிப்பெருக்கு' என்று சொன்னார்களோ!









ஆடியில் பெய்யும் மழையைத் தொடர்ந்து விதைப்பு வேலைகள் தொடங்கி விடும். வயலில் வரம்பு கட்டுவார்கள். பதிவான நிலத்தில் 'புழுதி' போடுவார்கள். 'புழுதி போடுவது' என்றால் மாரி மழைபெய்யும் போது வெள்ளம் மூடிப் பயிர் அழிந்து விடாமல் இருப்பதற்கான முன்னேற்பாடு. அதாவது வெள்ளத்துக்கு 'முந்திப்பயிர் வளர்த்தல்'.

தமிழர்கள் ஆடிப்பிறப்பைத் தான் முதலில் கொண்டாடினார்கள். ஆடிப் பிறப்பே அவர்களுடைய வருசப்பிறப்பு. அதனால் தான் அதற்கு விலைக் குறைப்பும் கொண்டாட்டங்களும் கூழும் கொழுக்கட்டையும் விடுமுறையும் விண்ணேற்றும் பட்டங்களும்....

ஆடியை விதைப்புக் காலம் என்றும் தை மாதத்தை விளைச்சலை அறுவடை செய்யும் காலம் என்றும் வகைப்படுத்தி வேறு வைத்திருந்தார்கள். அது ஆறு மாதப் பயிர் வளர்த்த காலம். நெல்லும் ஆறுமாதப் பயிராகவே இருந்தது. மரவள்ளியும் ஆறு மாதமாகவே இருந்தது. ஆடியிலேயே புதிதாகத் தொழில் தொடங்கினார்கள். நகை செய்தார்கள். விதை எடுத்தார்கள். பயிர் நட்டார்கள். விருந்து சென்றார்கள். வீடு வேய்ந்தார்கள். இன்னும் இப்படிப் பல நல்ல காரியங்களை ஆடியில் செய்யும் வழக்கம் பல இடங்களில் உண்டு.

பிறத்தியார் வந்து ஆடியை ஒதுக்கி வைக்கும் வரையில் ஆடி தான் சிறப்புக் காலம். இப்படியெல்லாமிருந்த ஆடியில் தான் எங்களுக்கு எல்லாப் பொல்லாப்புகளும் வந்தன.

ஒரு ஆடி கலங்கினால் ஏழு ஆடி கலங்கும் என்று ஆச்சி சொன்ன மாதிரியே காரியங்கள் நடந்தன. இப்போது நாங்கள் ஏழு ஆடியில் மட்டுமா கலங்குகிறோம். வருகின்ற எல்லா ஆடியும் கலங்க வைக்கும் ஆடியாகத்தானிருக்கு.

ஆடிக்கலக்கம் அல்லது ஆடிக்கலகம் இன்னும் தீரவில்லை. 1983 ஜீலையில் (ஆடியில்) ஜே.ஆர். மூட்டிய தீ.... இன்னும் அடங்கவில்லை. அது எரிகிறது. எரிந்து கொண்டேயிருக்கிறது. பாருங்கள் தமிழர்களின் ஆடியில் என்ன மாதிரித் தீயை மூட்டியிருக்கிறார்கள் என்று.

அன்றைக்கு மூட்டிய தீயில் தென்னிலங்கையில் தமிழர்கள் எரிந்தனர். சிறையிலிருந்த தமிழர்களையும் அது விட்டு வைக்கவில்லை. தங்கத்துரை, ஜெகன், குட்டிமணி. இராசகிளி என்று 53 பேரை அது தின்று தீர்த்தது. அந்தத் தீயை எரிக்கும் வழியைத் தமிழர்களும் காணவில்லை. பதிலாக அவர்களும் அதற்கு எண்ணை ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள். அன்று வடிந்த கண்ணீரைத் துடைப்பதற்குப் பதிலாக அந்தக் கண்ணீரை வைத்து வியாபாரம் செய்கிறார்கள்.

இடையில் யாரோவெல்லாம் வருகிறார்கள். போகிறார்கள். இலங்கைப் பிரச்சினை பற்றிப் பேசாத ஆட்களும் இல்லை. நாடுகளும் இல்லை. அவரவர் தங்கள் தங்கள் விருப்பம், நோக்கம், தேவை என்பதற்கேற்ற மாதிரி ஒவ்வொரு அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் சொல்கிறார்கள். ஐ.நாவில் கூட ஆராய்கிறார்கள். பேசுகிறார்கள். விவாதிக்கிறார்கள்.

ஆனால், தமிழர்கள் தெருவிலும் திண்ணையிலும் குடிசையிலும் அகதி முகாமிலும் சிறையிலும் கிடந்து வாழ வேண்டியதே யதார்த்தமாயிருக்கிறது.

1983 ஜீலை 13 இல் யாழ்ப்பாணம் — திருநெல்வேலியில் ஒரு கண்ணிவெடித் தாக்குதல் நடந்தது. அதுவரையும் படையினருக்கெதிராக நடத்தப்பட்ட தாக்குதல்களிலேயே அந்தத் தாக்குதல் தான் பெரிய தாக்குதல். தாக்குதல் நடந்த இடத்திலேயே பதின்மூன்று இராணுவத்தினர் பலியாகினர்.

அந்த ஜீலை (ஆடி) யில் அது ஒரு சரித்திர நிகழ்வு. இந்தத்தாக்குதல் நடந்து இரண்டு நாளில் தங்களுடைய தோல்வியின் வெப்பியாரத்தைக் காட்டுவதற்கு அரசாங்கம் இனவாதிகளைக் கொண்டு பெரும் இன வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. விளைவு, கொழும்பு எரிந்தது. தமிழரின் வீடுகளும் கடைகளும் கொழுத்தப்பட்டன. படையினரும் பொலிசும் பார்த்துக் கொண்டிருக்க இனவெறியர்கள் தமிழர்களின் மீது கத்தியைப் பாய்ச்சினர். தீயை மூட்டினர்.

கொழும்பிலிருந்து தமிழர்கள் பாதி உயிரோடு கப்பலேறி அகதியாக ஊருக்கு வந்தார்கள். ஆக, ஒரு பக்கத்தில் சிறைச்சாலைப் படுகொலைகள். மறுபக்கத்தில் தென்னிலங்கை வன்முறை. அடுத்த பக்கத்தில் அங்கிருந்து அகதிகளாக

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



வெளியேற்றம். இதெல்லாம் சர்வதேச சமூகத்தை உலுக்கியதோ இல்லையோ தமிழ் மக்களை கடுமையாகத் தாக்கியது. அவர்களுக்கு இது ஆறாத வடு. தீயும் கண்ணீரும் பெருகிய ஆறாத காயம் அது. அந்த ஜீலை தமிழர்களின் வரலாற்றில் காயங்களின் பதிவு எனவாகியது. அதுவே கறுப்பு ஜீலை என்றானது.


இதெல்லாம் பழைய கதை தான். இதை இங்கே ஏன் திரும்பவும் சொல்லி சலிப்பூட்டுவான்? அல்லது 'இப்ப இதைச் சொல்லி இன்னும் பகையை ஏன் வளர்க்க வேணும்?' என்று நீங்கள் கேட்கலாம். நானும் மறக்கத்தான் நினைக்கிறேன். ஆனால், இதையெல்லாம் மறப்பதற்கு ஒரு அவகாசம் வேணும். ஒரு மாற்றம் வேணுமே. அப்படியா நடக்கிறது நாட்டில்?

ஜீலை தமிழருக்குக் கறுப்புத் தான். ஆடி நெருப்புதான். அப்படியே 1987 ஜீலையில் யாழ்ப்பாணத்தை முழுதாக ஆக்கிரமிக்கும் நோக்கத்தோடு ஜே.ஆர். வடமராட்சிப் பிரதேசத்தின் மீது பெரும் படையெடுப்பைச் செய்தார். சனங்களின் மீது படையெடுப்பைச் செய்யும் ஒரு மரபை இலங்கையில் தொடங்கி வைத்தது ஜே.ஆரின் ஆட்சி.


(22ம் பக்கம் பார்க்க)




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே! நிதானமாக பேசுவது காரிய வெற்றிக்கு உதவும். மற்றவர்களின் காரியங்களில் ஈடுபடும் போது கவனம் தேவை. திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் கூடுதல் கவனம் தேவை. வாடிக்கையாளர்களை அனுசரித்து நிதானமாக பேசுவது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளுடன் கவனமாக பேசுவது நல்லது.




ரிஷபராசி அன்பர்களே! சில குழப்பங்கள் நேர்ந்தாலும் இதுவரை நடக்காமல் இருந்த காரியத்தை சிறப்பாக செய்து முடித்து மனநிம்மதி அடைவீர்கள். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் நடந்து முடியும். முக்கிய நபர்கள் மூலம் எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நடக்க தேவையான உதவிகள் கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! சில சங்கடங்கள் நேரலாம். கெட்ட கனவுகள் உண்டாகலாம். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படலாம். எதிர்பார்த்த பணம் கைக்கு வர தாமதமாகும். இடம் பொருள் அறியாமல் பேசுவதால் அடுத்தவர்களிடம் மனஸ்தாபம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் செலவுகள் உண்டாகும். வீண் அலைச்சல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் தேவையற்ற பயணம் செல்ல நேரலாம்.




கடகராசி அன்பர்களே! எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்து கொள்வீர்கள். சுக்கிரன் சஞ்சாரத்தால் அலைச்சலை சந்திக்க நேரிடும். எதிர்பாலினத்தாரிடம் பழகும் போது கவனம் தேவை. விருப்பத்திற்கு மாறான சம்பவங்கள் நடக்கலாம். தொழில் வியாபாரத்தில் குறிப்பாக கூட்டு தொழிலில் இருப்பவர்கள் எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது.கணவன், மனைவிக்கிடையே நீடித்து வந்த மனவருத்தம் நீங்கி சந்தோஷமான சூழ்நிலை ஏற்படும்.





சிம்மராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். அடுத்தவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்கும் போது கவனம் தேவை. அவற்றை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. புதிய பொறுப்புகள் கிடைக்கும். புதன்கிழமை அவதானம் தேவை.




கன்னிராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் நன்றாக நடந்து முடியும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் சுபகாரியங்கள், மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இருக்கும்.




துலாம்ராசி அன்பர்களே! மனதில் குறிக்கோளை வைத்து துணிவுடன் செயலாற்றுவீர்கள். உங்கள் பேச்சு திறமையால் பல காரியங்கள் சிறப்பாக நடந்துமுடியும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் அவர்களால் உதவி கிடைக்கலாம். நீங்கள் செய்யும் காரியங்களுக்கு உதவுவதற்காக யாராவது ஒருவர் துணை நிற்பார். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்ய எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். போட்டிகள் விலகும். உத்தியோகஸ்தர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை சாதிப்பீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகள் வரும். வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். மற்றவர்களின் நலனுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். கவுரவம், அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம்.








தனுசுராசி அன்பர்களே! எதிலும் லாபமான நிலை காணப்படும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிலும் தயக்கமோ பயமோ இருக்காது. தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும். ஆனால் கைக்கு பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேன்மை அடைவார்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்வார்கள்




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை தைரியமாக உறுதியுடன் செயல்படுத்துவீர்கள் .உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.வீடு, மனை வாங்க திட்டமிடுவீர்கள். எடுக்கும் காரியம் சிறிது முயற்சிக்கு பின் நடைபெறும். தொழில் வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருந்தது இனி சீராகும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். தேவையான வசதி வாய்ப்புகள் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்து வெற்றி பெறுவீர்கள். மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் பிறக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நண்பர்கள், உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். தந்தையுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமை காணப்படும். நம்பிக்கையுடன் செயலாற்றி நன்மை அடைவர்.




மீனராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். எடுத்த காரியத்தை செய்யும் போது எது சரி, எது தவறு என்று தடுமாற்றம் ஏற்பட்டாலும் திறமையால் அதனை செய்து முடிப்பீர்கள். பண வரவு எதிர்பார்த்தபடி இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். நிதி உதவி கிடைக்கும். வாடிக்கையாளர் மத்தியில் மதிப்பு கூடும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# ஆடி ஆட்டுமா? ஆடி அடங்குமா?

(21ம் பக்கத் தொடர்ச்சி) இந்த நெருப்பை ஏந்தியே 1987இல் பதிலடியாக ஒரு கரும்புலித் தாக்குதல், முதற் கரும்புலியாக மில்லர் நெல்லியடியில் படை முகாமிற்குள் பாய்ந்தார். இது சரியோ பிழையோ என்பதற்கப்பால், அப்படிப் பாயக் கூடிய ஒரு ஆவேசத்தை அன்றைய நிலைமைகள் ஏற்படுத்தியிருந்தன.

கறுப்பு ஜீலையாக தமிழரின் மனங்களில் பதிவாகியிருந்த ஜீலை அன்று கரும்புலிகளின் ஜீலையாக மாறியது. ஒரு காலம் அழுது வடிந்த தமிழர்கள் அழுவதற்குப் பதிலாக அழ வைத்தவர்களை கதிகலங்க வைக்கும் புதிய மரபைத் தொடங்கினார்கள். இப்போது எல்லாமே மாறிவிட்டது. வரலாறு யாரும் எதிர்பார்க்காத மாதிரி தன் போக்கில் பயணிக்கிறது.

மில்லர் நடத்திய தாக்குதலில் நிலை குலைந்த இலங்கை இராணுவத்தை எப்படி வழிப்படுத்துவதென்று தெரியாமல் தத்தளித்தது ஜே. ஆர் அரசாங்கம். அப்போது சந்தர்ப்பம் பார்த்து இந்தியா உள்நுழைந்தது. அதே ஜீலையில் இந்தியா முதலாவது பகிரங்க நடவடிக்கையை 'ஒப்பிரேஷன் பூமாலை' என்ற பெயரில் நடத்தியது. ஜே.ஆரின் படையெடுப்பால் பாதிக்கப்பட்டிருந்த தமிழர்களின் பிரதேசங்களில் இந்திய விமானங்கள் உணவுப் பொருட்களை வீசின.

அதற்குப்பிறகு அதே ஆண்டில் (1987) ஜீலை 29 இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் வந்தது. பிறகு இரண்டாண்டுகளுக்கும் மேலாக தமிழர்கள் இந்திய இராணுவத்தால் படாத பாடெல்லாம் பட்டார்கள். இதெல்லாம் நடந்து முப்பது ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் எல்லாமே நேற்று நடந்ததைப் போல இருக்கிறது. ஆனால், கறுப்பு ஜீலையின் நாற்பது ஆண்டுகளைத் தொடுகின்ற இந்த நாட்களில், கரும்புலிகளின் அத்தியாயம் ஆரம்பமாகி இத்தனை ஆண்டுகளின் பின்னும், தமிழர்கள் போக வேண்டிய தூரம் பற்றி இன்னும் இந்த ஜீலையில் ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியா பேசுகிறது. இந்தியாவுக்கு அப்பால் யப்பானியர்கள் பேசுகிறார்கள். நோர்வேக்காரர்கள் பேசுகிறார்கள். அமெரிக்கர்கள் பேசுகிறார்கள். பிரித்தானியர்கள், பிரெஞ்சுக்காரர்கள், சீனர்கள் என்று எல்லோரும் பேசுகிறார்கள். போதாக்குறைக்கு மனித உரிமை அமைப்புகள், ஐ.நா, சனல் 4, பி.பி.ஸி என இன்னும் ஏதேதோ எல்லாம் பேசுகின்றன....! அப்படி என்னதான் பேசுகிறார்களோ...!

# இலங்கைத்தீவின் அரசியலில் சர்வதேச....

(19ம் பக்கத் தொடர்ச்சி) கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனைச் சந்தித்துள்ளார். அதன் அடுத்த நகர்வே ஜனாதிபதியின் தமிழ் கட்சிகளுடனான சந்திப்பு அமைந்திருந்தது. இத்தகைய மூன்று சந்திப்புகளும் ஒரே விளைவை அடைவதே. அதாவது ஜனாதிபதியின் இந்திய விஜயம் சுமூகமானதாக அமைய வேண்டும். இதில் அமெரிக்காவுக்கு இருந்த நோக்கம் ஜனநிபதியுடன் தமிழ் தரப்புக்கள் சமூகமான உறவைப் பேணுவதாகும். அதன் மூலமே ஜணாநிபதி அடுத்த ஆண்டு நடைபெறும் தேர்தலில் மேற்குலகத்தின் வெற்றியை உறுதிப்படுத்த முடியும். அதற்கான ஒத்துழைப்பினை ஏற்படுத்த சர்வதேச நாடுகளின் எல்லையை குறிப்பிட்டு தமிழ் கட்சிகளின் தலைவர்களை மட்டுப்படுத்த முயன்றார்.

இதற்கான புரிதலை ஜனாதிபதி தமிழ் கட்சிகளுடன் உரையாடும் போது 2005 தன்னை நிராகரித்து தவறை நினைத்தது போல் மீண்டும் குழப்பி விடாதீங்கள் என்று குறிப்பிட்டிருந்தமை கவனத்திற்குரியது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரின் சம்பந்தனுடனான சந்திப்பும் தமிழ் கட்சிகளுடனான சந்திப்பும் ஜனாதிபதியுடனான சந்திப்பினை சாதகமாக்குவதற்கானதாகவே தெரிகிறது. ஆனால் அது சாத்தியமாகவில்லை. முற்றிலும் வேறுபட்ட நிலையை தோற்றுவித்துள்ளது.

இரண்டு, இந்தித் தூதுவரது சம்பந்தருடனான சந்திப்பு ஜனாதிபதியுடனான சந்திப்பு மட்டுமன்றி ஜனாதிபதியின் இந்திய விஜயம் வெற்றிகரமானதாக அமைவதற்கானதாகும். இதுமுழுமையாக ஈழத்தமிழரது அரசியல் பிரச்சினைக்கு 13 ஆம் சீர்திருத்தை தீர்வாக அங்கீகரிக்க வைப்பதாகும். அதனைத் தாண்டி இந்தியா ஈழத்தமிழருக்கான எத்தகைய முன்மொழிவையும் ஏற்றுக் கொள்ளாது என்பதை கோடிட்டுக் காட்டுவதாகவே தோன்றுகிறது. இதற்கு ஆதாரமாக இன்னோர் நிகழ்வு அரங்கேறியுள்ளது.

அதாவது வடக்கு-கிழக்கு சிவில் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத் தில் அமைந்துள்ள இந்திய பிராந்திய தூதரகத்திற்கு 13ஐ முழுமையாக அமுல் படுத்துமாறு வழங்கிய விண்ணப்பம் சார்ந்து இந்து பத்திரிகை தலைப்பு செய்தி யாக்கியுள்ளது என்பதாகும். இவற்றை அவதானிக்கும் போது ஜனாதிபதி குறிப்பிட்டது போல் பொலிஸ் அதிகாரமற்ற 13ஐ அமுல்படுத்துவதற்கான அங்கீகாரத்தை இந்தியா வழங்கி விட்டதாகவே தெரிகிறது. அதுவே ஜனாதிபதியின் இந்திய விஜயத்திற்கு முன்பான ஜனாதிபதியின் இராஜதந்திர வெளிப்பாடாக அமைந்திருக்கிறது. அது மட்டுமன்றி தமிழ் அரசியல் தலைவர்கள் மீதான ஜனாதிபதியின் அணுகு முறையும் அதன் தாற்பரியத்தை வெளிப்படுத்தியுள்ளது.

எனவே அமெரிக்கத் தூதுவரது கருத்து அமெரிக்கா அல்லது மேற்கு நாடுகள் சர்வதேசம் என்று கருதும் வரையுமே. ஆனால் இன்னோர் தரப்பும் புவி கோளத்தில் சர்வதேச சக்திகளாக உள்ளனர். அதில் சீனாவும் ரஷ்யாவும் முக்கிய பங்கு தாரராவார்கள். அத்தகைய சக்திகளின் நகர்வுகளும் சர்வதேச தலையீடுகளே. அத்தகைய அணியின் நகர்வு ஒட்டுமொத்த சர்வ தேசத்தையும் சர்வதேச அரசியலையும் மாற்றக் கூடியது. அப்போது புவிசார் அரசியலும், பூகோள அரசியலும் புதிய வடிவத்தை அடையும். சர்வதேசத்தின் நலன்கள் தான் அவற்றின் எல்லையும் தலையீட்டையும் தீர்மானிக்கும் அம்சங்கள் என்பதை அமெரிக்க தூதுவரது கருத்து தெளிவாக உணர்த்தியுள்ளது.

# அணில் கட்டிய பாலமும்

(15ம் பக்கத் தொடர்ச்சி) முன்மொழிவை கொடுத்திருக்கிறாரா? அண்ணாமலையை லண்டனுக்கு அழைத்து உறவுப் பாலம் அமைப்பதற்கு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் முயற்சிக்க, ரணில் சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைக்க முன் வந்திருக்கிறாரா?

அல்லது இந்துத்துவாவை ஒரு கொழுக்கியாக பயன்படுத்தி பாரதிய ஜனதா அரசாங்கத்தை நெருங்கிச் செல்லலாம் என்று நம்பும் ஒரு பகுதி ஈழத் தமிழர்கள் அதற்காகக் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்க, ரணில் விக்கிரமசிங்க புதிய பிணைப்பு திட்டங்களின் மூலம் இந்தியாவை நெருங்கிச் சென்று இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியா தன் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியாதபடி நிலைமைகளை வெற்றிகரமாகக் கையாள முயற்சிக்கிறாரா?

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







இந்த இடத்தில் விளம்பரம் செய்ய அழையுங்கள்
416 841 9600

இந்த இடத்தில் விளம்பரம் செய்ய அழையுங்கள்
416 841 9600

